பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 09 ஞாயிற்றுக்கிழமை (23-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:210

# சமாதான சூழலைக் குழப்புவதில் கடற்படையினர் மிகுந்த முனைப்பு!



## புலிகள் பிரமுகர் புலித்தேவன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூன்23

சமாதான சூழலைக் குழப்பிவிடவேண்டும் என்பதில் கடற்படையினர் மிகுந்த முனைப்பாக இருக்கின்றனர். கடந்த காலங்களிலும் கடற்படையினரால்தான் சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டைகள், குழப்பங்கள் ஏற்பட்டன. இது விடயத்தில் அரசு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும்; எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். - இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பிரமுகர் புலித்தேவன்.

வேலணைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேற்று இலங்கை கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த சமயம் 'உதயன்' செய்தியாளருடன் அவர் உரையாடினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

சமாதானத்தைக் குழப்புவதில் கடற்படை மிகவும் முனைப்பாக இருக்கின்றது என்பதை வேலணைச் சம்பவம் வெளிப்படையாக உணர்த்துகிறது. சமாதான முயற்சிகள் முன்னேறிச் செல்லும் இவ்வேளை கடற்படையினரும் அவர்களுடன் இணைந்து தனிக்காட்டு ராஜாக்களாக வலம் வருபவர்களும் மேற்கொள்ளும் கீழ்த்தரமான செயல்களை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது விடயத்தில் அரசு ஒரு தீர்க்கமான இறுக்கமான முடிவை புலிகளுக்கு வழங்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் அரசு - விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் சமாதான முயற்சியும் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## நயினை அம்மன் தேர்த் திருவிழா இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்23

வரலாற்றுப் பெருமைமிகு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர் உற்சவம் இன்று வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலைமுதல் பூசைகள் ஆரம்பமாகி காலை 9.30மணிக்கு தேர் உற்சவம் இடம்பெறும்.

தேர்த் திருவிழாவை முன்னிட்டு நேற்று முதல் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தை நோக்கி வருகைதந்தவண்ணம் உள்ளனர். நீண்ட காலத்தின் பின்னர் இம்முறை பெரும் எண்ணிக்கையான தென்பகுதி மக்களும் ஆலய வழிபாடுகளில் கலந்துகொள்கின்றனர். ஏ-9 வீதிவழியாக பெரும் எண்ணிக்கையான தென்னிலங்கை யாத்திரிகர்கள் நயினாதீவுக்கு வந்துசேர்ந்துள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்தம் வகிக்க நோர்வே முடிவு

கொழும்பு,ஜூன்23

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இழுபறிநிலை தொடர்வதை அடுத்து -

இந்த விவகாரத்தில் மத்தியஸ்தராகப் பணிபுரிவதென நோர்வே முடிவு செய்துள்ளது என்று நோர்வேத் தூதரகப் பேச்சாளர் தோமஸ் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் இந்த விவகாரத்தில் அனுசரணையாளராகப் பணிபுரிந்துவரும் நோர்வே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதில் இருதரப்புகளும் காட்டி வரும் தாமதம் குறித்து விசனம் தெரிவித்துள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

### வேலணை தாக்குதல் சம்பவம் குறித்து

# நீதியான விசாரணைக்கு பிரதமர் ரணில் உத்தரவு!

யாழ்ப்பாணம்,ஜூன்23

**வேலணையில் விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நீதியான - பக்கசார்பற்ற - விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கிறார்.**

**பிரதமரின் உத்தரவை அடுத்து கடற்படை மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகள் நேற்று விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு வந்த கடற்படையின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம, வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கவுடன் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட விஜய

(18ஆம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் புலிகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவருடன் உரையாடுவதை முதற்படத்திலும் புலிகள் பிரமுகர்களான வீமன், அருணன் ஆகியோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். தாக்குதலுக்கு இலக்கான செம்மணனும் முதற்படத்தில் (நடுவில்) காணப்படுகிறார்.

### தீவகத்தில் நீண்டகாலம் பணிபுரியும்

## கடற்படை அதிகாரிக்கு விரைவில் இடமாற்றம்?

கொழும்பு,ஜூன்23

தீவகத்தில் விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக தீவகத்தில் நீண்டகாலம் பணிபுரியும் கடற்படை உயர் அதிகாரி ஒருவர் இடம்மாற்றம் செய்யப்படவிருக்கின்றார் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவம் தொடர்பாகவும் கடந்த 17ஆம் திகதி விடுதலைப் புலிகள் தீவுப்பகுதிக்கு சென்றவேளை இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் -

இந்தச் சம்பவங்களில் பிரஸ்தாப கடற்படை அதிகாரிக்கு எதிராக குற்றம் சுமத்தப்படக்கூடும் என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-3)

## புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்துப் பேண இருதரப்பும் உறுதி

### நேற்றைய மாநாட்டில் இணக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து நடப்பது என்றும் -

அந்த உடன்பாட்டை மீறிச் செயற்படுவதில்லை என்றும் -

கடற்படை, இராணுவம், பொலீஸ், விடுதலைப் புலிகள் ஆகிய நான்கு தரப்புகளும் இணங்கியுள்ளன.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதித் தலைவர் ஜோர்ஜன் பக்லண்ட் இவ்வாறு தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று நடந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றைய மாநாட்டில் பங்குபற்றிய சகல தரப்புக்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து நடப்பதாக உறுதியளித்துள்ளன. தற்சமயம் ஏற்பட்டுவரும் இயல்பு நிலையைக் குழப்பப்போவதில்லை என்பதிலும் உறுதியாக உள்ளன.

வேலணையில் விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் தாக்கப்பட்டது உண்மை. அங்குள்ள மக்கள் இதை உறுதி

(18ஆம் பக்கம் பார்க்க)



கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா படை அதிகாரிகளுடன் உரையாடுகிறார்.

# மீனவர்கள் மீது பழிபோட முயற்சிக்கின்றார் டக்ளஸ்!

### தீவக கடற்றொழிலாளர்கள் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

வேலணைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை ஸ்ரீலங்கா கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பியின் முக்கிய உறுப்பினர்கள் தாக்கியுள்ளனர். தாக்கிவிட்டு அந்தப் பழியை எம்மீது சுமத்த முற்படுகின்றனர்.

- இவ்வாறு தீவக கடற்தொழிலாளர்கள் சார்பில் துறையூர் கடற்தொழிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இனிய நாளிதழ்

# வேலணைச் சம்பவம் பற்றி ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்23

வேலணையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தின் வேலணைப் பகுதியில் கடந்த வியாழனன்று புலிகளின் உறுப்பினர்கள் சிலர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்திற்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)க்கும் எந்த வகையிலும் தொடர்பு எதுவும் இல்லை. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. ஜனநாயக ரீதியாக மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து இனப்பிரச்சினைக்கு கௌரவமான, நிரந்தரமான தீர்வைக் காண நடைமுறைச் சாத்தியமான வழியில் முயன்று வருகின்றது. ஜனநாயக அரசியல் அரங்கில் போட்டியாளர்களுக்கு முகம்கொடுக்க தயாராகவே இருக்கின்றது. எனினும் எவரையும் எதிரிகளாகக் கருதி கொன்று குவிக்க முற்பட்டது இல்லை. அரசியல் காரணங்களுக்காக படுகொலைகளைச் செய்ததும் இல்லை.

ஆனாலும் பகடத்தனமான அரசியல் உள்நோக்கங்களுக்காக ஈ.பி.டி.பி. மீது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் காலத்திற்குக் காலம் அபாண்டமாக பழி சுமத்தப்பட்டும் அவதூறான பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது. இத்தகைய ஒரு நிகழ்ச்சியே தீவுப் பகுதியில் கடந்த வியாழனன்று புலிகள் மீது நடந்த தாக்குதலில் ஈ.பி.டி.பியை சம்பந்தப்படுத்தும் முயற்சி ஆகும்.

மேலும் அமெரிக்காவும், பிரிட்டனும் தமது அமைப்பின் மீது தடை விதித்தமைக்கு லக்ஷ்மன் கதிர்காமரின் பொய்ப்பிரசாரங்களே காரணமெனக் கருதி அவதூறு கற்பித்தமைக்கு ஒப்பானதாகவே இப்போது மக்கள் மத்தியில் தமது செயற்பாடுகளுக்கு எதிரான அதிருப்தி உணர்வைத் திசை திருப்ப ஈ.பி.டி.பி. மீது பழி சுமத்தப்படுகிறது. இதேவேளை இச்சம்பவம் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரியூடர் ரோக் கெல்சன் கூறுகையில் இச்சம்பவம் பற்றிய தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என்று யாழ்ப்பாண அலுவலகம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஊர்காவற்றுறைப் பகுதிக்கு விசாரணையாளர்கள் அனுப்பப்பட்டதாகவும் எனினும் இந்தச் சம்பவம் நடைபெற்றமைக்கான எதுவித சாட்சியத்தையும் காணமுடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எது எவ்வாறாயினும் வேலணைப் பகுதியில் புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தோடு ஈ.பி.டி.பிக்கு எந்த வகையிலும் எதுவிதத் தொடர்பும் இல்லை. அத்துடன் ஈ.பி.டி.பி. மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து நடைமுறைக்கு சாத்தியமான வழியில் செயற்படுகின்றதே தவிர எவரையும் வலுச்சண்டைக்கு இழுக்கும் பலப்பரீட்சையில் ஈடுபட்டிருக்கவில்லை.

இதேவேளை, ஈ.பி.டி.பியானது ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காண்பதற்கான அரசியல் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறது. இது எந்த வகையிலும் தேசத்துக்கு விரோதமானது அல்ல என்பதையும் தமிழ் பேசும் மக்கள் நன்கறிவார்கள் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# தவறுதலான சூட்டுச் சம்பவத்தில் காவல்துறையினர் இருவர் பலி!

கிளிநொச்சி,ஜுன்23

வவுனியா அனந்தபுளியங்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட தவறுதலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது தமிழீழ காவல்துறை சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ நாகமுத்து குமார்(கனகரெத்தினபுரம், இரண்டாம் கண்டம் இடது கரை, (முத்தையன்கட்டு)

★ இராசையா உதயன் (திருகோணமலை. தற்போதைய முகவரி :- முதலாம் வட்டாரம், நேசன் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-6)

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஜுன்23

அகில இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் 80ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டிகள் அடுத்த மாதம் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான 'டெக்கத்தலன்' போட்டி, பெண்களுக்கான 'கெப்பத்தலன்' போட்டி உட்பட மற்றும் பல போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டு வீரர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை கஸ்தூரியார் வீதியில் உள்ள அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் கேட்டுள்ளது. (ஐ-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்23

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் 'ரொப் ரென்' (Top ten) உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பி.ப. 4 மணி - கலட்டி ஐக்கிய வி.கழகம் எதிர் அல்வாய் மனோகரா வி.க.

★ பி.ப. 5 மணி - வதிரி யங் லயன்ஸ் வி.க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.க. (ஐ-ரி)

★ ★ ★

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இணுவில் உதயசூரியன் வி.கழகமும் அரியாலை ஸ்ரார் வி.கழகமும் மோதுகின்றன. (ஐ-ரி-86)

யாழ்ப்பாணம்,ஜுன்23

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளும் மெய்வன்மை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் திருமலை மைக்கேசர் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன.

எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை உதைபந்தாட்டப் போட்டிகளும் அடுத்தமாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் வலைப்பந்து, கரப்பந்து (ஆண்) போட்டிகளும் அடுத்தமாதம் 7ஆம்,8ஆம் திகதிகளில் மென்பந்து கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளன.

அடுத்தமாதம் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களின் விவரம் பாடசாலைகளுக்கு யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

கடந்த வருடத்தை விட இம்முறை அதிகளவான வீரர்கள் பங்குபற்ற இருப்பதாகவும் -

யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி. அருணகிரிராஜா தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்துள்ள கொழும்பு ரட்ணம்ஸ் விளையாட்டுக் கழக அணி இன்றும் நாளையும் இரு ஆட்டங்களில் பங்குபற்றவிருக்கின்றது.

நாவாந்துறை சென்.நீக்கலஸ் கழகத்துடன் இன்று பிற்பகல் 4.45 மணிக்கும் -

யாழ்.பல்கலைக்கழக அணியுடன் நாளை பிற்பகல் 4.45 மணிக்கும் -

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ரட்ணம்ஸ் அணி மோதவிருக்கின்றது. (ஐ-3)

## 'தேச வழமைகள்' நூல் வெளியீடு

பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய 'தேச வழமைகள்' எனும் நூலின அறிமுக விழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார். வரவேற்புரையை கலாநிதி ப.புஸ்பரட்ணமும், தொடக்கவுரையினை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், வாழ்த்துரைகளை அருட்கலாநிதி பேராயர் எஸ்.ஜெபநேசன், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரும் நிகழ்த்துவர்.

அறிமுகவுரைகளை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, பேராசிரியர் வெ.வேதாசலம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள். (ஐ-12)

## கருத்தரங்கு.

யாழ்ப்பாணம்,ஜுன்23

தொழில்சார் கற்கை நெறிகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று IPAS நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள பிரபல கணக்காய்வு நிறுவனத்தைச் சேர்ந்த பட்டயக் கணக்காளர்கள் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்குவர். (ஐ-3)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜுன்23

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் வாரத்தில் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகள் தவிர்ந்த நாள்களில் காலை 6 மணிமுதல் 7மணிவரை யோகாசன வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆண்,பெண் இருபாலருக்குமான இந்த யோகாசன வகுப்புகளில் பங்கேற்று பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# ஈரானியப் பூகம்பத்தில் 500பேர் வரை உயிரிழப்பு!

தெஹ்ரான்,ஜுன்23

நேற்றுக்காலை வடமேற்கு ஈரானில இடம்பெற்ற கடுமையான நில அதிர்வினால் 500பேர் வரை உயிரிழந்துள்ளனர்; ஆயிரக்கணக்கானோர் காயமடைந்திருக்கின்றனர்.

தலைநகர் தெஹ்ரானிலிருந்து 130கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள குவாஜ்வின் மாகாணத்தை மையமாகக் கொண்டு உள்ளூர் நேரப்படி நேற்றுக்காலை 7.30 மணிக்கு ஏற்பட்ட இந்தப் பூகம்பம் 6.3 ரிச்டேர் அளவைக் கொண்டிருந்தது. இதனைத் தொடர்ந்து சுமார் அரை மணித்தியாலத்தில் 4.8 ரிச்டேர் அளவில் மற்றொரு நில அதிர்வு இப்பகுதியில் ஏற்பட்டது.

இந்த மாகாணம் உட்பட ஈரானில் 7 மாகாணங்கள் நேற்றைய பூகம்பத்தால் பாதிப்படைந்துள்ளன.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலானவை பின்தங்கிய பகுதிகள் என்றும் -

தொலைத் தொடர்புகள் முற்றாக ஸ்தம்பித்துவிட்ட இந்த நிலையில் உயிரிழப்புகள் மற்றும் சேதவிவரங்கள் குறித்த தகவல்களை உடனடியாகப் பெறமுடியவில்லை என்றும்-

ஈரானிய தொலைக்காட்சி தெரிவித்தது. (ஒ)


ஜப்பான் தென்கொரியா

உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002





துருக்கி - செனகல் அணி வீரர்களிடையிலான மோதல்

# துருக்கி, கொரியா வெற்றி!

சியோல்,ஜுன்23

உலகக் கிண்ண உதைபந்தாடடப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்துக்கு தென்கொரியா மற்றும் துருக்கி அணிகள் தெரிவாகியுள்ளன. ஏற்கனவே பிரேஸில், ஜேர்மனி அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று நடந்த மற்றும் இரு கால் இறுதி ஆட்டங்களில் தென்கொரிய அணி ஸ்பெயினையும் துருக்கி அணி செனகலையும் வென்றன.

முதலாவது ஆட்டம் தென்கொரியாவின் குவான்சு மைதானத்தில் நடந்தது. ஸ்பெயினை எதிர்த்து தென்கொரியா ஆடியது. 5-3 என்ற பெனால்டி கோல் அடிப்படையில் தென்கொரியா வெற்றிபெற்றது. தென்கொரியாவின் உதைபந்தாட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள் இது. அதேசமயம் பலம்மிக்கதான ஸ்பெயின் அணிக்கு இது அதிர்ச்சித் தோல்வியாகவும் அமைந்தது.

ஆரம்பம் முதலே ஸ்பெயின் அணி ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த அணி பின்பாதி ஆட்டத்தில் அடித்த இரு கோல்களை முறையற்றவை என்று நடுவர் அறிவித்தார். இதனால் ஸ்பெயின் வீரர்கள் கடும் விசனம் அடைந்தனர். இது ஆட்டத்தின் முடிவில் நடுவர் மீதான வசைமாரியாக மாறியது.

ஆட்டத்தின் முன்பாதியில் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. ஸ்பெயினின் முன்கள வீரர்கள் கோல் அடிப்பதற்கு முயன்றனர் எனினும் தென்கொரிய வீரர்கள் அவற்றை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினர்.

ஆனால், பின்பாதி ஆட்டம் ஆரம்பமான 5ஆவது நிமிடத்தில் - ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் - ஸ்பெயின் வீரர் ருபன் பராஜ் தலையால் மோதி ஒரு கோல் அடித்தார். ஆனால் அவர் உயரே எம்பி பந்தைத் தலையால் மோதுவதற்கு முன்னர், கோல்கம்பத்துக்கு முன்பாக 10 யார் தூரத்தில் இருந்து குறுக்கே பந்தை எதிர்நோக்கி ஓடும்போது கொரிய வீரர் லீ வொன் - ஜுவின் மேல்சட்டையைப் பிடித்திழுத்து, அவர் ஆட முடியாமல் இடைஞ்சல் செய்தார் என்பதால் அந்த கோல் முறையற்றது என்று நடுவர் அறிவித்தார். இறுதியில் எந்த அணியும் கோல் அடிக்காத நிலையில் ஆட்டம் வெற்றி தோலவியின்றி முடிவடைந்தது. இதனால் 30 நிமிடங்கள் மேலதிக நேரம் வழங்கப்பட்டது.

இந்த மேலதிக நேர ஆட்டம் ஆரம்பித்த 2நிமிடங்களில் - ஆட்டத்தின் 92ஆவது நிமிடத்தில் - ஸ்பெயின் வீரர் பெர்னாணடோ மொரின்ட்ஸ் தலையால் மோதி கோல் அடித்தார். இந்த கோலும் முறையற்றதென நடுவரால் அறிவிக்கப்பட்டது. மொரின்ட்ஸ் கோல் அடிப்பதற்கு ஏதுவாக பந்தை உயரே தூக்கி அடித்த ஸ்பெயின் வீரர் ஜோக்குயின் பந்து எல்லைக் கோட்டை விட்டு வெளியே சென்றபின்னும் அதனை எடுத்து ஆடியதை நடுவர் அவதானித்ததால், அதுவும் முறையற்ற கோல் என அறிவிக்கப்பட்டது. ஆட்டத்தின் 100ஆவது நிமிடத்தில் மொரின்ட்ஸ் உதைத்த பந்து சீறிச் சென்று கொரியர்களின் கோல்கம்பத்தில் பட்டுத் தெறித்தது. இறுதியில் மேலதிக நேரமும் எந்த அணியும் கோல் அடிக்காத நிலையில் நிறைவடைந்தது.

எனவே முடிவை எட்டுவதற்காக ரைபிரேக்கர் (பெனால்டி கோல்கள்) அறிவிக்கப்பட்டது. இதில் வழங்கப்பட்ட ஐந்து சந்தர்ப்பங்களையும் சரியாகப் பயன்படுத்திய தென்கொரிய வீரர்கள் 5கோல்களை அடித்தனர். ஆனால், ஸ்பெயின் வீரர் ஜோகுயின் அடித்த பெனால்டி உதையை அபாரமாகத் தடுத்தன் மூலம் தென்கொரிய கோல் காப்பாளர் லீ வொன் ஜே அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார். முடிவில் 5-3 என்ற கோல் அடிப்படையில் தென்கொரியா வெற்றிபெற்றது. இதன் மூலம் உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய முதலாவது ஆசிய அணி என்ற பெருமையை தென்கொரியா பெற்றுக்கொண்டது.

இரண்டாவது கால்இறுதி ஆட்டம் செனகல் மற்றும் துருக்கி அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது. மேலதிக நேரத்தில் அடிக்கப்பட்ட பொன்கோல் (Golden goal) மூலம் துருக்கி அணி வென்றது.

ஆட்டம் ஆரம்பம் முதல் விறுவிறுப்பாகவும் சுவாரஸ்யமாகவும் நடந்தது. இரு அணிகளும் விட்டுக் கொடுக்காமல் ஆடி ரசிகர்களைப் பரவசத்தில் ஆழ்த்தின. ஆட்டம் ஆரம்பமான நீண்ட நேரம்வரையும் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை.

முன்பாதி ஆட்டம் நிறைவடைவதற்கு ஒரு நிமிடமே இருக்கையில் - ஆட்டத்தின் 44ஆவது நிமிடத்தில் - செனகல் வீரர் பஸ்ரூக் ஒரு கோலை அடித்தார். ஆனால், அவரது அணி வீரர் ஒருவர் துருக்கிய பின்கள வீரர்களையும் தாண்டி - அவர்களது கோல்கம்பங்கள் அருகே நின்றதனால் அந்த கோல் 'ஓவ் சைட்' கோலாக அறிவிக்கப்பட்டது.

பின்பாதி ஆட்டத்தின் போதும் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. கிடைத்த பல சந்தர்ப்பங்களை இரு அணிகளும் தவறவிட்டன. இதனால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது.

மேலதிக நேரம் ஆரம்பித்த 4ஆவது நிமிடத்தில் - ஆட்டத்தின் - 94ஆவது நிமிடத்தில் துருக்கிய வீரர் லகான் மன்ஸிஸ் அற்புதமாகப் பந்தைத் தட்டி விட்டு ஒரு கோலை அடித்தார். அவர் அடித்த பொன் கோல் அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தது. இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் துருக்கி வென்றது. (ம)

# நிராயுதபாணிகளாக நின்ற புலிகளை ஆயுதக்கும்பல் தாக்கியது அராஜகம்!

## தீவகச் சம்பவத்துக்கு எழும் கண்டனங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்23

**நிராயுதபாணிகளாக தீவகத்தில் அரசியல் பணியாற்றிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது ஆயுததாரிகள் நடத்திய அராஜகத் தாக்குதலைக் கண்டிப்பதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட பல பொது அமைப்புகளும் அறிக்கை வெளியிட்டுள்ளன.**

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

"ஸ்ரீலங்கா கடற்படையினர் தேசத்துரோக ஈ.பி.டி.பி. கும்பலுடன் இணைந்து தமது அராஜகத்தை ஆயுதம்தரிக்காத விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது காட்டியுள்ளமை இன்றைய சமாதானச் சூழலை தலைகீழாக மாற்றிவிட்டிருக்கக்கூடிய ஓர் அபாயகரமான நிலைமை ஆகும். புரிந்துணர்வு ஒப்பந்தம் தீவுப்பகுதியில் முறிவடைவது தெய்வாதீனமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழ், சிங்களத் தலைமைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டே கையெழுத்திடப்பட்டதாகும். இதனை அமுல்படுத்துவதில் விடுதலைப் புலிகள் அதீத அக்கறை செலுத்தும் அதேவேளை, ஸ்ரீலங்கா அரசதரப்பானது ஓர் அசமந்தப் போக்கினையே காட்டிவருகிறது. ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் சமாதானம் தொடர்பான நம்பிக்கையை வளர்ப்பதற்குப் பதிலாக சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பிவிடக்கூடிய நடவடிக்கைகளிலேயே தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். அத்துடன் ஸ்ரீலங்கா அரசின் சமாதான செயற்பாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஒருவர் கூட ஆயுத உதவிதொடர்பான பேச்சு வார்த்தைக்காக வெளிநாடு சென்றுள்ளார். மொத்தத்தில் ஸ்ரீலங்கா அரசானது சமாதானம் என்ற திரைக்குப் பின்னால் யுத்த முன்னெடுப்பிலேயே அதீத அக்கறை கொண்டுள்ளது என்பதையே இவை வெளிக்காட்டி நிற்கின்றன. இந்தச் சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும். ஏனெனில் தமது ஆயுதப்படையினரை வழிப்படுத்தவேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்தினுடையதாகும்.

எனவே நிரந்தர சமாதானத்திற்கு எதிரான இத்தகைய பல சக்திகளுக்கு எதிராக உடனடியாக வெகுண்டெழுந்து போராடவேண்டிய நிலைமை எமது மக்கள் முன் ஏற்பட்டுள்ளது. நிரந்தரமானதோர் சமாதானத்திற்காக நாம் செய்யும் ஓர் உயர்ந்த பங்களிப்பு அதுவாகவே இருக்கும்." என்றுள்ளது.

### நீதி சமாதான ஆணைக்குழு

"வேலணையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு உறுப்பினரை சிலர் தாக்கிய வன்செயலை யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதிசமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

சமாதானத்துக்காக மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், புரிந்துணர்வு ஒப்பந்தம் தடம்புரளாது பேச்சு மேசை நோக்கி முன்செல்ல வேண்டுமென்று அனைத்து மக்களும் அங்கலாய்ப்புடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்நாள்களில், இத்தாக்குதல் மிகமிகப் பொறுப்பற்றதொரு செயலாகும்.

இக்குற்றத்தைப் புரிந்தவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், இதுபோன்ற சமாதானத்தைக் குழப்பும் அடாவடித்தனம் மீண்டும் இடம்பெறாது தடுப்பதற்கான வழிவகைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்றும் அரசை நாம் கோருகின்றோம்.

### யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

தீவகப் பகுதியில் தமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை கூட்டுறவுத் துறை சார்ந்த சகலரும் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த நடவடிக்கை சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்த எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆப்பு வைப்பதுபோலாகும்.

மேலும் இது வன்முறைகள் தணிந்து நிற்கும் குடாநாட்டு மண்ணில் மீண்டும் வன்முறையைத் தூண்டும் நடவடிக்கையாகவே பார்க்கத் தோன்றுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்த அமுலை சீர்குலைக்கும் இப்படியான நடவடிக்கைகளை இம்மண்ணின் மக்கள் வெறுக்கவே செய்வார்கள்.

### கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

வேலணைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மீது தீவகத்திலுள்ள தமிழ்க் கட்சி உறுப்பினர்களோடு படையினரும் இணைந்து மேற்கொண்ட வன்முறைத் தாக்குதலை கடற்றொழில் சமூகத்தின்சார்பில் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது அரசியல் கடமைகளை நிறைவேற்ற நிராயுதபாணிகளாகத் தீவகம் சென்ற விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை தாக்கியதை உண்மையான சமாதானத்தை அடைய விரும்புபவர்கள் எவரும் விரும்பமாட்டார்கள்.

இப்படியான செயல்கள் மூலம் சமாதானத்தை விரும்புபவர்கள் யார்? வன்செயலை விரும்புபவர்கள் யார்? என்பதை உலகம் இனங்காண வேண்டும்.

### யாழ்.மாவட்ட பாரவூர்தி கூட்டுறவுச் சங்கம்

விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதிப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் வேலணையில் தாக்கப்பட்ட சம்பவத்தை யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில், மேற்படி சம்பவமானது சமாதான முயற்சிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடும்.

எனவே, இதுபோன்ற சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கவலையையும் அளிப்பதாகவுள்ளது.

### ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆத்திரமடையச் செய்வதன்மூலம் யுத்த நிறுத்தத்தை குலைத்து மீண்டும் போரை வெடிக்கவைக்க துடித்து நிற்கும் தமிழ் - சிங்கள அரசியற் சதிக் கும்பல்களும் படைகளிலுள்ள சில பிரிவினரும் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக கூட்டாக விடுத்து நிற்கும் சவாலின் வெளிப்பாடே தீவுப் பகுதியின் தாக்குதல் சம்பவம் ஆகும்.

கடந்த சில வாரங்களில் கிழக்கில் இடம்பெற்ற அதிரடிப்படையினரின் சில நடவடிக்கைகள், தீவுப் பகுதிச் சம்பவத்தை அடுத்து மறுநாள் மாலை மூதூரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் எல்லாமே ஒரே திட்டத்தின் வெவ்வேறு செயற்பாடுகளே.

போரினால் பெரும் ஜீவனம் நடத்திவந்திருக்கும் தமிழ் - சிங்கள சுயநல சக்திகளின் சமாதான எதிர்ப்பு நாசகார நடவடிக்கைகள் அனைத்தும் சட்டத்தின் இரும்புக்கரம் கொண்டு உடனடியாக நசுக்கப்படவேண்டும் என்பதே சமாதானத்திற்காக ஏங்கி நிற்கும் சகல தரப்பு மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

### யாழ்ப்பாண வணிகர் கழகம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் சமாதானத்திற்கான இலக்கை நோக்கி விடுதலைப் புலிகளும் அரசும் முயற்சிகள் மேற்கொண்டுவரும் இவ்வேளையில், நடந்துள்ள இச்சம்பவம் மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒரு விடயம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சீர்குலைத்து சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்காது சகல தரப்பினரும் பொறுமையுடன் தமிழ் மக்களின் சுபீட்சத்திற்கு உதவவேண்டுமெனவும், இப்படியான அருவருக்கத்தக்க செயல்கள் இனிவரும் காலங்களிலும் நடைபெறாது இருக்கவேண்டும் எனவும், தமிழ்பேசும் மக்களின் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

### யாழ்.மாவட்ட வர்த்தக சம்மேளனம்

தற்போது தமிழ் மக்களின் முக்கிய எதிர்பார்ப்பு சமாதானமே. விடுதலைப் புலிகளும் அரசும் சமாதான இலக்கை நோக்கிப் புரிந்துணர்வு உடன்படிக்கையின்கீழ் சகல முயற்சிகளும் மேற்கொள்ளும் இவ்வேளையில், நிராயுதபாணிகளான விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் இருவர் வேலணையில் தாக்கப்பட்ட சம்பவம் ஓர் அருவருக்கத்தக்க செயல். சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு இச்செயல் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இப்படியான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடைபெறாது சமாதானத்திற்கான இலக்கை அடைவதற்கு சகலரும் ஒத்துழைப்பை நல்கவேண்டுமென நாம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (ஓ)

## சாயி சமித்தியில் சமய நிகழ்வுகள்

பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா நிலையத்தில் நாளை காலை 9மணிமுதல் பண்ணிசை, காயத்திரி மந்திர ஜெபம், ஓம்காரம், இலட்ச அர்ச்சனை ஆகியன இடம் பெறவுள்ளன.

அத்துடன் வைத்தியகலாநிதி ஆர். மகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவு, நாராயண சேவை என்பனவும் நடைபெறும். (ஓ-4)

## மண்டபம் திறப்பு

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் கடந்த 10ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

கோயில் சங்காபிஷேக தினத்தன்று நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட பூசைகளும், வீதியுலாவும் இடம்பெற்றன. (ஓ)

## தொழில்சார் கருத்தரங்கு

ஐ.பி.எ.எஸ். நிறுவனம் தொழில்சார் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தும் நோக்கிலான கருத்தரங்கு ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடத்துகிறது. ஆர்வமுள்ளோர் இதில் கலந்து பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-ரி)

## 'சிற்றிக்அசிட்' பாவனையை தடைசெய்ய ஆலோசனை

### அமைச்சுகள் நடத்துகின்றன

தரக்குறைவான 'சிற்றிக்' அசிட் இறக்குமதி செய்வதைத் தடைசெய்வது குறித்து சுகாதார அமைச்சும், விவசாய அமைச்சும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. 'சிற்றிக்' அசிட் உணவுப் பதார்த்தங்கள் மற்றும் பானங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுவதை தடைசெய்யவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மேலும் சிற்றிக் அசிட்டுக்குப் பதிலாக எலுமிச்சைப் பழத்தின் பயன்பாடு அறிமுகப்படுத்தப்பட்டவுள்ளதாகவும் விவசாய மற்றும் கால்நடை அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரவித்துள்ளார்.

'சிற்றிக் அசிட்' பெருமளவில் இறககுமதி செய்யப்பட்டு உணவுகள் மற்றும் பானங்களைப் பதனிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறான உணவுகள், பானங்களை மக்கள் உட்கொள்வதனால், சுகாதார ரீதியாக உடல் நிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது என ஆய்வுகள் மூலம் அறியவந்துள்ளது. அதனால் அதன் பாவனையைத் தடைசெய்ய ஆலோசிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் எலுமிச்சம்பழத்தைப் பாவித்து தரத்தில் சிறந்த சிற்றிக் அசிட்டை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் திட்டம் உத்தேசிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

## தாயைக் காப்பாற்றுவதற்காக கிணற்றுள் குதித்த மகள் பலி!

ஊர்காவற்றுறை,ஜூன்23

கிணற்றினுள் வீழ்ந்த தாயைக் காப்பாற்றும் பொருட்டு கிணற்றினுள் குதித்த மகள் நீரில் மூழ்கி பரிதாபமான முறையில் உயிரிழந்தார்.

இத்துயரச்சம்பவம் அண்மையில் நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்றது.

தி.தர்சினி (வயது 17) என்ற இளம் பெண்ணே இவ்வாறு பரிதாபகரமான முறையில் உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

சம்பவதினம் இரவு 7 மணியளவில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற தாயார் கிணற்றில் தவறி விழுந்தார். இதனை அவதானித்த மகள் தாயாரைக் காப்பாற்றும் பொருட்டு கிணற்றினுள் குதித்ததாகவும்.

சத்தம் கேட்டு அயல் வீட்டில் நின்ற சகோதரர் கிணற்றினுள் வீழ்ந்த தாயாரை மீட்டு ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த தாயார் மகள் கிணற்றினுள் வீழ்ந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அதன் பின்னர் அயலவர்கள் உடனடியாக மகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்தனர். எனினும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-16)




முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்
செண்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி). 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554


WATERTEC

### கடந்த மே மாதம்வரை

## தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்த 6ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம்

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மே மாதம் வரை மீளக் குடியமர்ந்த மக்களில் 6 ஆயிரத்து 385 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 540 பேருக்கு இலவச உலர் உணவு நிவாரணம் வழங்க பிரதேச செயலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் ஆயிரத்து 606 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 424 பேருக்கும், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் 2 ஆயிரத்து 111 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 444 பேருக்கும், கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் 2 ஆயிரத்து 668 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 672 பேருக்கும் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-117)


அந்த நாளிலிருந்தே
நம்பிக்கையுடன் பாவிப்பது யானை சீற்
மட்டும் தான்...
இலங்கையில் முதற் தரமான...
யானை
மஸ்கனைட்
கூரை, சீலிங்கிற்கான தகடுகள்
விநியோகத்தர்கள்:
வரையறுக்கப்பட்ட மஸ்கன்ஸ்
175 ஸ்ரீ சுமணதிஸ்ஸ மாவத்தை,
கொழும்பு 12.
தொலைபேசி: 325561-3
விநியோகத்தர்கள்:
வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 326701/ 5, 324913
மற்றும் நாடளாவிய கிளைகள்
உறுதியின் மறுவடிவம்
(சி22585)

# உதயன்

## விரைந்து செயற்பட்டு விபரீதங்களைத் தடுத்துநிறுத்துக!

நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தீவுப்பகுதியில் வேலணையில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

பொதுவாக கடற்படையினர் பயன்படுத்துகின்ற 'பிக்கப்' வாகனம் ஒன்றில் ஆயுதங்களுடன் வந்த நபர்களே புலிகளின் பொறுப்பாளர் ஒருவரைத் தாக்கி அவரை கொல்ல முயன்றதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

தீவகப் பிரதேசம் முழுவதும் கடற்படையின் பூரண கட்டுப்பாட்டினுள் இருக்கிறது. ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்களும் அங்கு செயற்படுகிறார்கள். அங்கு இரவுவேளை ஆயுதம் தாங்கிய நபர்கள் சுதந்திரமாக வாகனத்தில் வந்து இத்தாக்குதலை நடத்த முடிந்துள்ளது என்றால் அதற்கு முழுப்பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் கடற்படையினரே.

தாக்குதல் நடத்திய குழுவில் சீருடை அணிந்தவர்களும் ஆயுதம் தாங்கிய வேறு நபர்களும் இருந்திருக்கின்றனர்.

அவர்களில் கடற்படையினரும் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தோரும் அடங்கியிருந்ததைத் தங்களால் உறுதிப்படுத்த முடியும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். தீவுப் பகுதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல அடாவடியான சம்பவங்களிலும் கடற்படையினரும் ஈ.பி.டி.பி. குழுவினரும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையை புலிகள் செம்மையாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஆனால், குடாநாட்டில் தீவகப் பகுதி மட்டும் பொதுமக்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் அச்சுறுத்தலான பிரதேசமாக இருக்கிறது.

நாடு முழுவதும் போர்நிறுத்தம் அமுலில் உள்ளது. அரசுப்படைகளும் அதனை மதித்து பேணி வருவதை மறுக்கமுடியாது. ஆனால், வால் இருக்க தலை ஆடுவது போன்று படை உயரதிகாரிகளின் உத்தரவுகளை மதிக்காமல் கீழ் மட்டத்தில் உள்ள படையினர் தம்பாட்டில் செயற்படுகின்ற நிலைமை தீவுப்பகுதியில் காணப்படுகின்றது.

தீவுப் பகுதி மக்களை கடற்படையினர் தங்கள் சட்ட திட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி அங்கு புறம்பான ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கும் -

மனித உரிமை மீறல்களிலும் பாரிய குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்ற ஆயுதக் குழுக்களின் பாதுகாப்பான புகலிடமாக தீவுப் பகுதி மாற்றப்பட்டதற்கும் -

கடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் அங்கு ஆயுதக் குழுவினரின் அச்சுறுத்தல் எல்லை மீறி இருந்தது நாடறிந்த உண்மை.

இன்று அதன் தொடர்ச்சியாக விபரீதமான சம்பவங்கள் அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள வேளையில் தீவகப் பிரதேசம் முழுவதும் ஓர் இராணுவ வலயம் என்று கடற்படை பிரகடனம் செய்தது. அமைதியான முறையில் அங்கு அரசியல் பணியை ஆரம்பிக்கச் சென்ற புலிகள் இயக்கப் போராளிகள் பலமுறை தடுக்கப்பட்டனர்.

பின்னர் நிபந்தனைகளின் அடிப்படையில் அங்கு சென்ற போராளிகள் மீதும் அவர்கள் கெடுபிடிகளை விதித்தனர்.

நாடுமுழுவதும் அமுலில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை இங்கே செல்லாது என்று கூறி மார்தட்டிக் கொள்வது போன்று கடற்படையின் செயற்பாடுகள் அமைந்தன.

எவ்வளவோ பிரயத்தனங்களின் மத்தியில் மெல்லக் கட்டி வளர்க்கப்பட்டுவரும் சமாதான சூழ்நிலையை நொடியில் தவிடுபொடியாக்கிவிடக்கூடிய ஆபத்தான சூழலை தீவகத்தில் இன்னமும் அரசு அனுமதித்திருக்கிறது. வேலணையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் இந்தப் பாரதூரமான உண்மையை எல்லோருக்கும் உணர்த்தியிருக்கிறது.

ஆயுதபாணிகளால் தாக்கப்பட்ட போராளி 'சயனைட்' அருந்தி தன் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றிருக்கிறார். அப்படி ஒரு விபரீதம் நிகழ்ந்திருப்பின் துப்பாக்கிகள மீண்டும் சடசடக்கும் பேராபத்துக்கூட ஏற்பட்டிருக்கலாம்.

அரசு - புலிகள் சமாதான முயற்சிகளை குழப்பி மீண்டும் மோதலைத் தூண்டிவிட சில சக்திகள் கங்கணங்கட்டி செயற்படுகின்றன. அத்தகைய சக்திகளின் திரைமறைவுச் சதித்திட்டத்தின் ஒரு வெளிப்பாடுதான் வேலணைத் தாக்குதல் சம்பவம் என்ற ஐயம் தமிழர் தரப்புகளில் எழுந்துள்ளது. அரசு இனியும் காலந தாழ்த்தாது தீவுப் பகுதி நிலைவரத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து அணுகி அங்கு அவசரமாக இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.

ஆயுதக் குழுக்கள், உத்தரவுகளுக்குக் கட்டுப்படாத படையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், அத்தகையோரை அங்கிருந்து வெளியேற்றவும் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தீவுப்பகுதியில் இன்னமும் தங்கியிருந்து பணிபுரிகின்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கவேண்டியது இலங்கைக் கண்காணிப்புக் குழுவினதும் அரசுத் தலைமையினதும் முக்கியமான பொறுப்பாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

## மருதங்கேணி பிரதேசத்தில் நடமாடும் வைத்திய சேவை

### ஆரம்பிக்க பிரதேச செயலர் கோரிக்கை

வடமராட்சி,ஜூன்23

மருதங்கேணி பிரதேசத்தில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணம் கிளை மற்றும் கியூடெக் நிறுவனம் ஆகிவற்றின் நடமாடும் வைத்திய சேவையை ஆரம்பிக்குமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை அந்த அமைப்புக்களிடம் கோரியுள்ளார்.

இப்பிரதேசத்தில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. முன்பு அப்பகுதியில் இயங்கிய மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை, முள்ளியான் மருந்தகம் ஆகியன யுத்தத்தினால் சேதமடைந்து இயங்காத நிலையில் உள்ளன.

தற்பொழுது பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வாரத்தில் ஒருநாள் மட்டும் நடத்தப்படுகின்ற நடமாடும் வைத்திய சேவை போதாமலிருப்பதாகக் கூறப்படுகின்றது. (ம-182)

## தலைமைத்துவ பயிற்சி வகுப்பு

ஊர்காவற்றுறை கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட பாடசாலைகளின் மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே மேற்படி பயிற்சி வகுப்புக்களை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை கிறிஸ்தவ வாலிபச்சங்க செயலாளர் தெரிவித்தார். (ம-16)




## அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர பளைப் பிரதேச மக்கள் கோரிக்கை

### கலந்துரையாடலில் இது குறித்து ஆராய்வு

வடமராட்சிகிழக்கு,ஜூன்23

கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித்தரும்படி பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்தல் மற்றும் புனரமைப்பு சம்மந்தமாக கடந்த புதன்கிழமை பளைப்பிரதேச சபையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இக்கோரிக்கை பொது மக்களால் அரச அதிகாரிகளிடம் விடுக்கப்பட்டது.

கிளிநொச்சி அரச அதிபர் இ.ஐயாத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பளைப்பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

★ புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை, முகாவில் அ.த.க. பாடசால்ல ஆகியவற்றினை உடனடியாக ஆரம்பித்தல். ஏனைய பாடசாலைகளையும், மாணவர் தொகைக்கேற்றபடியாக ஆரம்பித்தல்.

★ கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் நடமாடும் வைத்திய சேவையினை ஆரம்பித்தல். யுத்தத்தினால் சேதமடைந்துள்ள பளை அரசினர் வைத்தியசாலையைப் புனரமைப்பதற்காக மதிப்பீட்டினைத் தயாரித்தல்.

★ பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடையொன்றினை புலோப்பளையில் திறத்தல். 2 மாதங்களுக்கிடையில் ஏனைய கிளைக் கடைகளையும், தலைமைச் செயலகத்தினையும் முழுமையாகச் செயற்பட வைத்தல்.

★ மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் காணப்படுமிடங்களில் அவற்றினை அகற்றுவதற்கான நடவடிக்கையினை உடனடியாக மேற்கொள்வதோடு, அது சம்பந்தமாக விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தல்.

★ பளை சந்தைக்காக தற்காலிக கொட்டில்களை அமைப்பதுடன், பளை சந்தை, கடைத் தொகுதிகளைப் புனரமைப்புச் செய்தல்.

★ பளை தபால் நிலையத்தையும் ஏனைய உபதபால் நிலையங்களையும் உடனடியாகச் செயற்பட வைத்தல்.

★ மக்கள் குடியிருக்கும் வீட்டுக் கிணறுகள், பொதுக் கிணறுகள் ஆகியவற்றினை பிரதேச சபையின் உதவியுடன் இணைத்து சுத்தப்படுத்தி குளோரின் இடுதல்.

★ பளை விவசாயிகளுக்கு காலபோகத்திற்கான விதை நெல்லினைப் பெற்றுக்கொடுத்தல் விவசாயிகளுக்குத் தேவையான காய்கறி விதை, நிலக்கடலை விதை ஆகியவற்றினைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியினை நாடுதல்.

★ வீதி அபிவிருத்தித் திணைக்களம், பளை பிரதேச சபை ஆகியவற்றுக்குச் சொந்தமான வீதிகளைப் புனரமைப்புச் செய்தல்.

★ இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளிலிருந்து ஓடுகள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் சூறையாடப்படுவதைப் தவிர்ப்பதற்காக கிராம மட்டத்தில் குழுக்களை அமைத்தல்.

★ யுத்தத்தினால் அழிந்துபோன தென்னைகளுக்குப் பதிலாக தென்னை மீள் நடுகைத் திட்டத்தினை ஆரம்பித்து, மானியம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

★ புலோப்பளை, கிளாலி பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மீண்டும் தொழிலினை ஆரம்பிப்பதற்காக உபகரணங்களைக் பெற்றுக்கொள்வதற்கு தமிழர் புனர்வாழ்வு கழகம் ஊடாக கடன்வசதிகளை அளித்தல்.

★ மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வீடுகளை அமைப்பதற்கான மரங்களைப் பெறுவதற்கு உதவுதல்.

★ பளைப் பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தினை நீக்கும் முகமாக, பஸ்கள் பளையிலும் தரித்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளல். (ம-182)

## புதிய தேர்தல் முறை ஆராய்கிறது அரசு

கொழும்பு,ஜூன்23

புதிய தேர்தல் முறை குறித்து அரசியல் கட்சிகளின் கருத்துக்களை அறிந்து கொள்வதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பாக ஆலோசனைகள் நடத்தப்படும். இதற்கான தீர்மானத்தை கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் மேற்கொண்டது.

அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

நாட்டுக்குப் பொருத்தமான ஒரு புதிய தேர்தல் முறையை விரைவில் கொண்டுவர அரசாங்கம் விரும்புகிறது. இதற்காக நிபுணர்களின் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

புதிய தேர்தல் முறை தொடர்பான எட்டு முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் இப்பொழுது பெறப்படுகின்றன. சிறுபான்மைக் கட்சிகளுக்கும் மக்களுக்கும் சாதகமானதாக இத்தேர்தல் முறை இருக்கும்.

அடுத்த மாதம் 10ஆம் திகதி இது பற்றி கட்சித் தலைவர்களுடன் விரிவாக ஆராய்வதற்கு பிரதமர் தீர்மானித்திருக்கிறார்.

- இவ்வாறு அமைச்சர் சொன்னார். (ஓ)

### நாளை

ஆனி 10
திங்கட்கிழமை
(24.06.2002)
திதி : பூரணை
பின்னிரவு 3.50 வரை.
நட்சத்திரம்: கேட்டை
முற்பகல் 11.21 வரை.
பூரணை விரத நாள்
சுபநேரம்: 11.55 - 1.25
ராகுகாலம்: 7.25 - 8.55
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எப்போதும் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்கும மனிதன் இறுதியில் தனக்கென்று ஒரு கொள்கை கூட இல்லாதவனாக ஆகிவிடுகின்றான்

## தொண்டர் ஆசிரியர் பிரச்சினை; தீர்வு வழங்க ஜனாதிபதி வலியுறுத்து!

கொழும்பு,ஜூன்23

வடக்கு - கிழக்கில் நீண்டகாலமாகக் கடமையாற்றிவரும் தொண்டராசிரியர்களின் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வுகாணுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வி அமைச்சரைப் பணித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மிக நீண்டகாலமாகவே வடக்கு - கிழக்கில் தொண்டராசிரியராகப் பணியாற்றிவருபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக உடன்நடவடிக்கை எடுக்குமாறும் -

அவர்களின் போராட்டங்களுக்கு சரியான தீர்வை வழங்குமாறு - ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

நீண்டகாலமாகத் தொடரும் தொண்டராசியர்களின் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்து நல்ல தீர்வை எடுப்பதுடன், பின்தங்கிய பிரதேசங்களுக்கான ஆசிரிய வெற்றிடங்களை அவர்கள் மூலம் நிரப்புமாறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவிற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஓ-12)

## சாவகச்சேரி நகரில் மீண்டும் மக்கள் வங்கி

### லால் நாணயக்கார ஆரம்பித்து வைத்தார்

தென்மராட்சி,ஜூன்23

சாவகச்சேரி மக்கள் வங்கி கிளை மீண்டும் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி இயக்குநர் சபைத் தலைவர் லால் நாணயக்கார வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் டபிள்யூ. ஜே.மார்டின் பெர்னாண்டோ, வடவலய பொது முகாமையாளர் எஸ்.இளம்பிறைநாதன், யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை முகாமையாளர் து.ரகு, அச்சுவேலி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் உட்பட மக்கள் வங்கி உயர் அதிகாரிகளும், வங்கி வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பின்னர் மக்கள் வங்கியின் ஜய ஸ்ரீ-2 பரிசுத் திட்டத்தில் சாவகச்சேரி வாசிக்கு பரிசாகக் கிடைத்த மூன்று சில்லு லான்ட்மாஸ்டர் வண்டியினை வங்கித் தலைவர் அவரிடம் வழங்கினார்.

விவசாயியான அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர், தனது தோட்டத்தில் விளைந்த மரக்கறி வகைகளை மக்கள் வங்கித் தலைவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். (ம-117)

# கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச்சங்கப் பொருளாளர் **திரு.க.கமலேந்திரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் வீ.கனகசபை

அவர்கள் 21-06-2002 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பணியாளர்கள் நலன்புரிச் சங்கம்,**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம், கரவெட்டி.**

(C/22654)

# மீசாலை கைத்தொழில் வணிகர் மன்ற அறிவித்தல்

மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றத்தின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் (24-06-2002) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய அன்னதான மண்டபத்தில் தலைவர் க.வேதநாயகம் தலைமையில் நடைபெறும். மிகமுக்கிய விடயங்கள் ஆராயப்பட வேண்டி இருப்பதால் பழைய, புதிய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

**தலைவர்/செயலாளர்,**
**கைத்தொழில் வணிகர் மன்றம், மீசாலை.**

(C/22653)


# நாடாளுமன்றம் தொடர் கூட்டம்

கொழும்பு,ஜூன்23

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும், வாழ்க்கைச் செலவையும் குறைக்கும் வழிவகைகள் குறித்து ஆராய நாடாளுமன்றம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தொடர்ச்சியாகக் கூடும்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. இது தொடர்பாகப் பல சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இதனால் ஓகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்தைத் தொடர்ச்சியாகக் கூட்டுவது குறித்து பேச்சு நடத்தப்படும். - இவ்வாறு அமைச்சர் பீரிஸ் மேலும் கூறினார். (ஐ)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10 - 08 - 1917 | 11 - 07 - 1995 |

## திருமதி ஐயாத்துரை பவளம்

திதி:23.06.2002

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*பிரதான வீதி,*
*சங்கானை கிழக்கு,* (5011)

அன்புப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

# க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள் - க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தின் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம்

நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஏதாவதொரு க்லோகாட் பெட்டி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டியது மட்டும்தான். அத்தோடு உங்கள் விற்பனையாளரின் பெயர், முகவரி என்பவற்றையும் எழுதி அனுப்ப மறக்க வேண்டாம். நீங்கள் பரிசு வெல்லும் அதே நேரத்தில் உங்கள் விற்பனையாளரும் பரிசு வெல்வார்.

**முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு**
21" கலர் தொலைக்காட்சி, கஸட் பிளேயர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்

**இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்**
21" கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளென்டர், VCD பிளேயர் ஒன்று

**விற்பனையாளர்களுக்கும் பரிசு**
அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் நான்கு [illegible]

**ஆறுதல் பரிசுகள்**
100 ஆறுதல் பரிசுகளாக [illegible] வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

**முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு**
முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்போரில், 650 பெயர்களுக்கும் அவர்கள் விற்பனையாளர்களுக்கும் அழகிய [illegible] ஒன்று

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19ம் திகதி 2002 இற்கு முன் அனுப்பிவையுங்கள்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு - த. பெ. இல. 911 கொழும்பு.

க்லோகாட்

Masters DDB LN C30 2002

TATA

எல்லாப் பரீட்சைகளும் யாழ்ப்பாணத்தில் வைப்பதற்கு ஏற்பாடு நடைபெறுகிறது

குறைந்த மாதச்சம்பளம் ரூபா 425,000

24 பட்டங்களுக்கும் தராதரப் பத்திரங்களுக்கும் அபார திறமையை வெளிப்படுத்துங்கள். அதற்கு ஆகக்கூடிய மொத்தக் கட்டணம் ரூபா 450,100/=

ரூபா 580,000 மாதச் சம்பளம்

In Search Excellance

A/L தேர்வுச் சோதனை எடுத்தவர்களும் சேரலாம்!

# THIRUGNANAS ACCOUNTANCY
## TRAINING ACADEMY (TATA)

**SPONSORED BY INTERNATIONAL ENGLISH FACULTY IN ASSOCIATION WITH ANGLO AMERICAN UNIVERSITIES**

***FACILITIES EXTENDED BY PROFESSOR THIRUGNANAS CONSORTIUM UNLIMITED***

(for the promotion of knowledge based HI-tech Moral and Humanitarian Society)
141, Power House Road, Central Bus Terminus, Jaffna, Sri Lanka.

**Wonderful and marvelous opportunity, nowhere else in the world, to qualify and pass, with places and prizes all sections in just three years. While studying for these two globally Recognized London examinations in Jaffna itself, TATA Students will be coached intensively to pass and obtain IO Certificates, 4 Diplomas, 4 Associate degrees, 2 degrees, ACCA, ACMA, ASCMA, ABE, with no extra fees and will be eligible to complete MSc, MBA, CPA, MCIM, with ease by further paying fees prevailing at the time.**

**Expected global demand for Fully Completed ACCA or CIMA with M.Sc or MBA 2nd degree is in the salary range of Sterling Pounds 30,000 to 50,000 which is equal to SL Rs. 350,000 to 580,000 per month plus car, bonus etc.**

மாதச் சம்பளமாக ரூபா 580,000 உழைக்கும்படி செய்யவேண்டிய முதற்படி உடனடியாக TATA இல் பதிவுசெய்யவும். இடத்தை உறுதிப்படுத்தவும். ஆங்கில அறிமுக வகுப்பில் சேரவும்.

TATAக்கு தலைமை வகிப்பவர் உலகிலேயே கணக்கியல் சார்ந்த அதிகூடிய பட்டங்களைப் பெற்றவர். அவர் அமெரிக்க சர்வகலாசாலைகளால் அனுமதிக்கப்பட்ட பீடாதிபதியும், பேராசிரியரும் கலாநிதியுமாகிய வெற்றிவேல் திருஞானசம்பந்தர். அவருடைய பட்டங்கள் 30இற்கும் மேல். அவற்றில் சில - MCom, phD, DCom, CPA, FTII, FSCMA, RA, AA, MCIM (UK), ACIS (UK.) ACCS (UK), MBIM (UK), FCCA (UK), FCMA (UK), ACA (NIG), ACCA (UK), MIIA (AUST), FBIM (UK), COMPLETED CIMA & ACCA IN THE SAME YEAR WITH CREDITS. இவர் 55 ஆண்டுகாலம் தொடர்ந்து கணக்கியலையும், அது சார்ந்த துணையான கணக்காய்வு, நிதியியல், பொருளியில், வர்த்தகம், நிர்வாகம், முகாமைத்துவம், பங்குடமை சார்ந்த சட்ட நுணுக்கங்களையும் புள்ளிவிவரவியல், உளவியல் போன்ற பல சோதனைகளிலும், சந்தைப்படுத்தும் அறிவியல் செயற்பாட்டிலும் ஆய்வுகளிலும் போதனைகளிலும் இடைவிடாது ஈடுபாடு கொண்டவர். மேலும் 40 ஆண்டுகளாக கணக்கியல் வருமானவரி ஆலோசகராக "திருஞானாஸ்" என்ற நற்பெயரில் ஆசானாக உலகிலேயே மிகக்கூடிய வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மிகக் கூடிய Balance Sheet Certify பண்ணியவர்.

பிரித்தானியாவிலுள்ள கேம்பிறிச் சர்வதேச வாழ்க்கை வரலாற்று நிலையத்தினரால் "சாதனை மிக்க மனிதர்" என 1981இல் பட்டியல் இடப்பட்டு பிரசுரமானவர். பிரபல்யமானவர்! பெருமை இல்லாதவர்! ' SIMPLETIN TATA ' தன்னிலும் மிக்கவராக்க நல்லவராக்க விருப்பமுடையவர்.

இவர் தனது வாழ்வின் பிற்பகலில் (IN THE EVENING OF HIS LIFE) தனது மண்ணின் இளைஞர், யுவதிகளை மேம்படுத்தவேண்டும், அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென நல்ல உள்ளார அபிலாசைத் தூண்டுதலால் 'TATA' க்குத் தலைமை வகிக்க தாராளமனதுடன் வந்துள்ளார்.

மேலும் கடந்த 7 வருடங்களில் இவர் கொழும்பிலிருந்து (MCIM) லண்டன் பட்டயம் பெற்ற சந்தைப்படுத்து நுண்ணறிவியல் அறிஞராகவும் (FSCMA) சிரேஷ்ட முகாமைக் கணக்காளராகவும், (CPA) சேட்டிபைட் பகிரங்கக் கணக்காய்வு அறிஞராகவும், (FTII) சிரேஷ்ட வரிவல்லுநராகவும், (MIIA). ஆஸ்திரேலிய உள்ளகக் கணக்காய்வாளராகவும், அறிவு, ஆய்வு, அனுகூலங்களையும் சேர்த்து, விரிவுரையாளராக, பேராசிரியராக, நிர்வாகியாக, பெரிய கொம்பனி அத்தியட்சகர்களுக்கு ஆலோசகராக அனுபவம் பெற்று தமது சொந்த மண்ணின் மைந்தர்களை, யுவதிகளை (KNOWLEDGE BASED HI-TECH MORAL AND HUMANITARIAN SOCIETY MEMBERS) உயர் தொழில் நுட்பத்தையும் அறிவு அடிப்படை சால் ஒழுக்க ஜீவகாருண்ய சமூகத்தினராக்க ஆவலும் அபிலாசையுமுடையவர்.

ஆகவே, இடத்துக்கு முந்துங்கள் முதல் SEMESTER 01.09.2002இல் ஆரம்பமாகிறது. பதிவுக் கட்டணம் Sterling Pounds 265. 15.08.2002க்கு முன் செலுத்தப்பட வேண்டும். மிகுதி FEES Sterling Pounds 2950 மட்டும் தவணை முறையிலும் செலுத்தலாம். (3x1200) அல்லது (12x400) இவை செலுத்தியோரை TATA ஒரு நாளாவது ஓய்ந்திருக்க அனுமதியாது. காலம் முழுவதும் கற்கையில் இன்பம் காண வைப்பார். ஆகவே உடன் துவக்கமாக முழுநேர வர்த்தக வியாபாரக் கணக்கியல் கல்வி சார்ந்த ஆரம்ப அறிமுகத் துரித ஆங்கில வகுப்பிலும் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றி நன்மைபெறவேண்டும். இது மேலதிக நன்மை.

TATA பயிற்சி மாணவர்கள உலக சாதனை படைக்க வசதியும் வாய்ப்பும் நிறைய உள்ளது. உலக சாதனை படைத்தவர் உதவுவார். சிந்தியுங்கள். பேசுங்கள். அவரிடம் பயிலுங்கள். ஊக்கம், உச்சாகம், உந்திகையை, உள்ளத்தில் கருவாக்குவார். மிகுதி விவரம் விளக்கம் விரிவுரை, தெளிவுரை, பகுப்புரை, மதிப்புரை அன்புடனும் ஆர்வத்துடனும் நேரில்.

**BURSER / RECTOR,**
**TATA Thirugnanas Building,141, Power House Road, Jaffna.**


(4892)

# நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

## 23-06-2002

# தாயே நின் அருளுக்கு ஈடேது; இணையேது!

இந்தப் பிரபஞ்சத்தையே தனது ஒரு தலையில் தாங்கி நிற்க பிரம்ம, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் தத்தம் தொழில்களை எவ்வித தளர்வும் இன்றி நிகழ்த்தி வருகின்றார்கள். உயர்ந்த மலைகளும், காவும் அட்டபர்வதங்களும், அட்டமா நாகங்களும், அட்டவசுக்களும், அட்டமா யானைகளும் தத்தம் நிலைகளில் இருந்து செயற்படுகின்றன. ஒரு கணம் நீ தலையை அசைத்தால்போதும். எல்லாமே நிலைகுலைந்துவிடும். பிரளயமே ஏற்பட்டு, பிரபஞ்சமே தலைதடுமாறிவிடும். தாயே எம் பொருட்டாக நீ காட்டும் அருளுக்கு ஈடேது; இணையேது; எல்லையேது. எம்மையெல்லாம் காத்து கடைத்தேற்ற என்றோ நீ இந்தப் புனித மண்ணில், கை புனைந்து இயற்றக் கவின் பெறு தோற்றம் கொண்டு எழுந்தருளி உள்ளாய். அழகுக்கொருவரும் ஒவ்வாத வடிவழகியாகவும், அணியும் அணிக்கு அழகூட்டும் திருவடிவாகவும், நாளுக்கு நாள் உன் பொலிவுறு தோற்றம் எம்மையெல்லாம் மெய் சிலிர்க்க வைக்கிறதே. தாயாகக் காண்கிறோம, தமராகக் காண்கிறோம். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடன் சொல்லமுடியாத துயரத்தைச் சுமந்த படி பிறந்த வீடுவிட்டு, வளர்ந்த



மண்ணைவிட்டு, கற்ற பாடசாலை மறந்து காடேறினோம். நாடுவிட்டு நாடு ஓடினோம். என்றாலும் உன் நாமம் எம் நாவில் மறந்தறியோம். பெற்றதால் அன்னையுமானாய்; எம்மைப் பேணி வளர்த்ததால அன்னையானாய். எம்மையும் எம்மைப் பெற்ற தாய்க்கும் தாயானாய். கலைகள் கற்று தேறவும் தாயாகி நின்று வழிகாட்டினாய், உலகமும் வானும் தொழும்படியும் தாயானாய். எல்லாமாய் நிற்கும் நீ இன்று தேரேறி வரக்காண்கிறோம். இந்தத் தேரோட்டம் இதுவரையும் நாம் பட்டுணர்ந்த துன்பங்களையெல்லாம் துடைத்தழிக்கவும், எம் மண்ணில் நாம் நிம்மதியாய் வாழவும், சாந்தமும் சமாதானமும் நிலவவும் அமையட்டும். இன்று நேரடியாக தாயே உன் அழகுறு கோலம் கண்டவர் மட்டுமல்ல, உன் விழாப் பொலிவு கேட்டவர், 'உதயன' மூலம் வாசித்தறிந்தவர் அனைவர்க்கும் நின் அருள்கிடைக்க வேண்டிக் கொள்கின்றேன்.

எல்லார்க்கும் எல்லா மங்களமும் கிடைப்பதாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கா.ஆ.தியாகராசா**
தலைவர்,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் வாழ்த்துக்கள்

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேரேறி அடியார்களுக்கு அருள் புரியவரும் இன்றையதினம் அடியார்களுக்கு சகல நலன்களும் கிடைக்க அம்பாளின் திருவருள் கிட்டுவதாகுக.

அலைகடல் நடுவே அமர்ந்து அடியார்க்கு அருள்புரியும் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்க்குச் சென்ற நாற்பத்துமூன்று ஆண்டுகளாகப் பசிப்பிணி தீர்த்து அன்னம் அளிக்கும் அமுதசுரபி அன்னதான சபையின் தொண்டு மேன்மேலும் சிறக்க அம்பிகையின் திருவருளை வேண்டிநிற்கின்றோம்.

அடியார்கள் அம்பிகையின் திருவருளால் சாந்தியும் சமாதானமும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி**
**அமுதசுரபி அன்னதான சபையினர்.**

# ஆசிச் செய்தி

வரலாற்றுப் பிரசித்திபெற்ற அம்பிகையின் தேர்பவனி இன்று நடைபெறுவதையிட்டு அனைத்து மக்களும் வந்து தரிசித்து தங்களுடைய நேர்த்திகளை முடிப்பதற்கு அம்பாளின் அருளாட்சி வேண்டி நிற்பதை உணரும்பொழுது மெய்சிலிர்க்கின்றது. சப்த தீவுகளின் நடுநாயமாகவும் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடமாகவும் மணிமேகலையில் மணிபல்லவமாகவும் விளங்குகின்ற நயினாதீவில் அருளாட்சி செய்கின்ற அம்பாள், குழந்தை வரம் இல்லாதவர்க்கு குழந்தைப் பேறும், கன்னிகைகளுக்கு மண வாழ்க்கையும் அமைவதற்கு சக்திபீடமாக விளங்கி அருள்பாலித்து வருவது நோக்கத்தக்கது. இங்குவரும் அடியார்களுக்கு பரிபாலன சபையினரால் நித்தமும் அன்னதானம் வழங்குவதும் போற்றத்தக்கது. அம்பாளை தினமும் வணங்கி வந்தால்

தனம் தரும் கல்வி தரும்.....

ஆகவே இன்று வருகை தந்த அடியார்களும் ஏனையோரும் நல்லனவை எல்லாம் பெற்று சீரும் சிறப்புமாகவும் சாந்தி சமாதானத்துடன் வாழ அன்னையின் பாதார விந்தங்களை திரிகரண சுத்தியுடன் வணங்கி மக்களுக்கு ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"ஸர்வே ஜனாக அகினோ பவந்து"
சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**ச.மகேஸ்வரக் குருக்கள்**
*நயினை.*

நம்பினோரைக் கைவிடலாமா தாயே! அம்மா!!
*அசல் 22 கரட் தங்கநகைகளுக்கு*
*உடனே நாடவேண்டிய இடம்:*
ஸ்ரீ நித்ஜ கல்யாணி நகைமாடம்
162, கஸ்தூரியார் வீதி,
(சி-22632) (ராஜா தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம்.

நாகேஸ்வரித் தாயே சரணம் அம்மா!

சகலவிதமான மணிக்கூடுகளையும்
தகுந்த முறையில்
திருத்திக்கொள்ள நாடுங்கள்:
"சிவாஸ்" மணிக்கூட்டுத் தொழிலகம்
24, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். (சி-22626)

தேவியே சரணம்! தேரிலே வருவாய்!
நேரிலே வந்து வரங்களை அருள்வாய்!
விழாக்கள் சிறப்புற வேண்டுமா?
விருந்தினர்கள் மகிழ்வுற வேண்டுமா?
எல்லாவிதமான கேக் வகைகளுக்கும்
ஐஸ்கிறீம், குளிர்பானங்களுக்கும்
மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்ள
ஸ்ரீகாந் எசன்ஸ்
அன்
குறோசறீஸ்
161A, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி),
(சி-22629) யாழ்ப்பாணம். T.P.: 2219

### எம்மைக் காத்திட வேண்டும்

நாகபூசணி அம்மா!
தேரேறி வருகின்ற தாயே!
நாம் போடுகின்ற பாமாலை
நின் திருக்காட்சி காண
திக்கெங்கும் இருந்து வந்த
இலட்சோப மக்கள்
ஆனந்தக் கூத்தாடி
அம்மையே! என்றழைத்து
ஆர்ப்பரித்துத் தொழுகின்றனர்
உன் தலம் வந்து தொழுதோர்க்கு
மட்டுமல்ல.....
தம் இல்லங்களில் இருந்தபடியே.
இலட்சோப இலட்சமாய்
அம்மையே! ஆராதிக்கின்றோம்
அகிலத்தை ஆளும் அம்மா!
எல்லோரையுமே காத்திட வேண்டும்.

- மீசாலையூர் கமலா.

அம்பிகா பல்பொருள் வாணிபம்
முதலாம் வட்டாரம்,
வடக்கு,
நயினாதீவு
உரிமையாளர்: *ந.ஜெகநாதன்*
(C-22659)

விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
விக்னேஸ்வரா அரைக்கும் ஆலை
6ஆம் வட்டாரம்,
வங்களாவடி, நயினாதீவு
ஆரம்பம்: *1948ஆம் ஆண்டு*
உரிமையாளர்: *நா.காராளபிள்ளை* (C-22658)

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாமே!
நம்பியுனைத் தோத்தரித்தோம் நாகபூஷணியே அருள்வாய்!
✪ M.D.90 மற்றும் நீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
✪ மோட்டார் சைக்கிள்களா?
✪ உதிரிப்பாகங்களா?
✪ பற்றி வகைகள் ✪ அசிட் வகைகள்
✪ சோலர் வகைகள்

அனைத்தையும் ஒருங்கே ஒரே இடத்தில் அழகாய்ப் பெற்றிட
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: மெயின் வீதி, சங்கானை.
அருள் விநாயகர் ரேடேர்ஸ்
106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
262, கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/22628)



# நயினை நாகபூஷணி அம்மன்

## 23-06-2002


நாகபூஷணித் தாயே! நமக்கருள்புரிவாய் தேவி!!
யாழ்.-கொழும்பு சொகுசு பஸ்சேவை



சுகமான பயணத்துக்கு எம்மை நாடுங்கள்!
பல வருடகால அனுபவம் மிக்கவர்கள்
உங்கள் திருப்தியே! எங்கள் சேவை!!
பதிவுசெய்து பயணஞ்செய்யுங்கள்

**R.B.Booking Centre**

15,கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: திரு.V.இராஜரட்ணம் (செல்வம்)
(சி-22603)


### தேரேறும் தேவிக்கோர் விண்ணப்பம்

அலைகடல் சூழ வீற்றிருந்தே நாளும்
அருள்தரும் நாகபூஷணித் தாயே!
நிலைத்திடும் சமாதானம் மலரவே
நித்தமுனை பணிகின்றோம் தாயே!
கலைத்திடுவாய் பகையை மண்ணில்
காத்திடுவாய் எம்மை நாளும் தாயே!
தளைத்திடும் அறங்கள் பெருக்கி
தமிழரின் வாழ்வினை காத்திட வேண்டுமம்மா!

-மதுரகவி-

## நம்பினோர்க்கு நல...
## எங்கள் குலநாயகி ந...

தனக்குத் தாய் எனக் குறித்துக் கூற எவரும் இல்லாதவள். அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் தாயானவள் அன்னை பராசக்தி. இதனால் 'அகிலாண்ட கோடியீன்ற அன்னை' என அருளாளர்களால் வித்து போற்றப்படுகிறாள்.

பிரபஞ்சத்தின் உற்பத்திக்குக் காரணமான மகா சக்தியாக அன்னை மூவுலகிலும் வியாபித்திருக்கின்ற அனைத்துச் சீவராசிகளும் உய்யும்பொருட்டு முப்பத்திரண்டு அறங்களையும் தோற்றுவித்தவள். அவ்வறங்களின் ஊடாக ஆசைக் கடலுள் அகப்பட்டு, அருளற்று அலைந்து திரிகின்ற ஆன்மாக்களுக்கு அருட்சுகம் ஈந்து, ஆன்மீக உணர்வில் ஆற்றுப்படுத்தி முத்தி இன்பத்தைத் தரும் பேற்றினைத் தர மகா சக்தியாகிய அன்னை பல்வேறுபட்ட வடிவங்களில் பல வேறு திருநாமங்களுடன் இவ்வுலகெங்கிலும் வியாபித்திருக்கிறாள்.

ஈழத்திலே நயினாதீவிலே ஸ்ரீ நாகபூஷணி என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்து தன்னை நாடிவரும் அடியார்களின் பொல்லா வினைகளை அகற்றும் அருமருந்தாக அன்னை அருள்பாலிக்கின்றாள்.

அன்னையின் ஆலயத்தின் பூர்வீக தோற்றம் பற்றி அறிந்துகொள்ள ஆதாரபூர்வமான சான்றுகள் எவையும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. சிற்ப சாஸ்திர வல்லுநர்களினதும் தொல்பொருள் ஆய்வாளர்களினதும் நவீன விஞ்ஞான ஆய்வுகளின்படி ஆலய கருவறையிலே காட்சி தருகின்ற ஐந்துதலை நாகவுருவும் அதன் கீழ்க் காணப்படும் அம்பிகையின் பிரதிஷ்டையும் பல ஆயிரம் வருடங்கள் முற்பட்டவையென நிரூபிக்கப்பட்டுள்ளன.

'நயினாதீவு மிகத் தொன்மையான நாகவழிபாட்டிற்குரிய இடமே. இவ்வழிபாடு காலிகதியில் பின் வந்த சக்தி (அம்பிகை) வழிபாட்டுடன் சங்கமித்து இன்று நாகபூஷணி வழிபாடாயிற்று' என்பது பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் கருத்து. 11.03.1951 திகதிய வீரகேசரி பத்திரிகையில் காரைக்குடி செல்லக்கண்ணு ஸ்தபதி என்பவரால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை ஒன்றில் 'நயினை ஆலயத்தின் கருவறையில் ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது. அம்பாளின் விக்கிரகம் ஆயிரம் ஆண்டுகள் மேல் பழைமையானது. அதைவிடவும் நாகப்பிரதிஷ்டை பழைமையானது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பேராசிரியரின் கூற்றுக்கு வலுச் சேர்ப்பதாயுள்ளது.

தற்போதைய ஆலயம் ஆகம விதிமுறைப்படி திராவிட சிற்பக் கலைப் பாணியில், கோபுரங்கள், தூபிகள், விமானங்கள்,


ஆதிபராசக்தி அம்பிகையே! நாங்கள்
நீதிநெறி பிறழாமற் காத்தருள்வாய்!



பல்வகை மின்சார, இலத்திரனியல்
பொருள்களையும் மனங்கவர்
அலங்கார அன்பளிப்புப்
பொருள்களையும் பல்வேறு வகைக்
கைக்கடிகாரங்களையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றிட

**டாட் என்ரபிறைஸ்**

11, 12, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
(சி-22625)





கடல் கடந்து வந்தோம் தாயே!
கருணைபுரிய வேண்டும் நீயே!
நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு
நீங்கள் நாடும் நம்பிக்கையான ஸ்தாபனம்

**சிங்கப்பூர் ஜுவல்லறி**

93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.3327
(C-22606)





நாகபூஷணித் தாயே!
நயினை நாகேஸ்வரியே!
நவீன பாணியிலமைந்த புதிய டிசைன் புடைவை
வகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

**ஏகாம்பரம் புடைவை மாளிகை**

கோல்டன் BRA மொத்த விற்பனையாளர்கள்
(72) 9, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.2151
(C-22607)



நாடிவரும் அடியவர்க்கருளும் நாகேஸ்வரியே வருக!



பட்டுப்புடைவைகளா!
பட்டு வேட்டிகளா!
திருமண முகூர்த்தக்
கூறைச் சேலைகளா!
அழகிய ஆடவரும்
நவநாகரிக நங்கையரும் விரும்பி
நாடுவது:

**சீமாட்டி புடைவைக் கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**மங்கை சில்க்ஸ்**

15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-22624)



அம்பிகையே தாயே! அருள்புரிவாய் நீயே!!



சிறுவர் சிறுமியர்க்கும்
ஆடவர்களுக்கும்
நங்கையர்களுக்கும் ஏற்ற
நவநாகரிக ஆடை வகைகளுக்கும்
புத்தம் புதிய சாறி தினுசுகளுக்கும்
நம்பிக்கையான நல்லதொரு
ஸ்தாபனம்

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

இணை: யோகாஸ் ஆடையகம்,
பிளவுஸ்பீஸ் பிரத்தியேகக் காட்சியறை,
17A, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-22601)



அம்பிகையே...
நாகேஸ்...
நம்பிவந்தோம்...
புரிவாய்...
தங்க, வைர நகைக...
மிகவும் நம்பிக்கை...
ஸ்தாபனம்:

**பூரணி நன...**

தங்கப் பவுண்...
(வின்சர் தியேட்...
1/5, கஸ்தூ...
யாழ்ப்ப...



நாகபூஷணி அம்பிகையே!
நானிலம் போற்றிடும் நாயகியே!
சரணம் அம்மா! சரணம் அம்மா!



**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

இல.50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-22605)



அம்பிகையே சரணம்! தாயே சரணம்!
சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
மற்றும் கண்ணைக்கவரும்
சிறுவர்களுக்கான சைக்கிள்கள்,
ஆடம்பரக் கார் அனைத்தையும்
உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்ய
நாடவேண்டிய இடம்:

**ஈஸ்வரன் ரேடேர்ஸ்**

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2813
(சி-22612)



அலைகடல் நடுவே அ...
அருள்புரியும் தாயே!...



புத்தம்...
வகைகளுக்கு...
நாட...

**த.சங்கரப்பி...**
**மை...**

21, சிறப்பு...
மின்சார நிலைய வீ...
T.P.: 021...
(சி-22608)

# ...ன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்



## ஞாயிற்றுக்கிழமை

## ...நலம் பல நல்கும் நயினை நாகபூஷணி

மண்டபங்கள், பரிவார மூர்த்திகளுக்குரிய ஆலயங்கள், அறுபத்து நான்கு நாயன்மார்களது சிலைகள் யாவும் சிறப்பாக அமையப்பெற்று, ஓர் அம்பிகையினுடைய ஆலயத்திற்குரிய சகல அம்சங்களையும் நிறைவாகப் பெற்று எழிலுடன் காட்சிதருகின்றது.

நேரம் தவறாது நான்கு கால நித்திய பூஜைகளும், மாதாந்தம் பௌர்ணமி நாள்களில் ஸ்ரீ சக்கர பூஜையும், வெள்ளிக்கிழமை தோறும் உற்சவமும், நவராத்திரி, திருவெம்பாவை உற்சவங்களும், நாயன்மார் குருபூஜைகளும் ஏனைய விசேடதினங்கள் அனைத்திலும் உற்வசங்களும் துறைதோய்ந்த வேதியர்களினால் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

லலிதா அஷ்டோத்திரம், ஸ்ரீ வித்தியா, ஸௌந்தர்ய லகரி, சகஸ்ர நாமம், ஸ்ரீசக்ர மந்திரம், திரி சதி போன்றவற்றின் ஆராதனை மந்திரங்களின் ஓசை ஆலயச் சூழலைத் தினம் தினம் புனிதமாக்குகின்றது. சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வருகின்ற ஆயிரக்கணக்கான மக்களின் மனங்களில் அமைதியையும் நிறைவையும் தருகின்றன. உடற் பிணிகளையும், பிறவிப்பிணியையும் நீக்க வேண்டுதல் செய்ய எத்தனையோ கெடுபிடிகளைக் கடந்து அலை கடல் தாண்டி வரும் அடியார்களின் பசிப்பிணியை நீக்க ஆலய அறங்காவலர் சபையினரால் நன்மனம் படைத்த தர்மசீலர்களின் நிதியுதவியுடன் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள கலியாண மண்டபத்தில் நித்திய அன்னதானம் கொடுக்கப்படுகிறது.

பல வருட இடைவெளியின் பின்பு இந்து, பௌத்த, இஸ்லாமிய மக்கள் கூடுகின்ற சர்வமத சந்நிதியாகக் காட்சி தருகின்றது நயினை அம்மன் ஆலயச் சுற்றாடல்.

அம்பிகையின் உயர் திருவிழாக் காலமாகிய இத்தினங்களில் கொடிய அதிக்க வெறி சரிந்துவீழவும், 'நான்' என்ற அகங்காரம் அழிந்து சாம்பலாகவும் 'சுந்தான சொசியச் சினக்கும் கடாதடக் கைமலை, முகத்தவுணனை கால் கொண்டு தைத்த' தாயை வேண்டுதல் செய்வோம்.

அதர்மத்தை அழித்துத் தர்மத்தைக்காக்க உன் மைந்தனுக்கு வேலெடுத்துக் கொடுத்து வழியனுப்பிய தாயே! நாம் எதைஎதையோ எல்லாம் இழந்துவிட்டோம் என்று அங்கலாய்க்கின்றோம். எவராலுமே பறிக்க முடியாத மனம் எங்களிடமிருக்கிறது.

தாயே உன் சந்நிதியில் கூடிநின்று ஒரேகுரலில் உன்னிடம் ஒன்று கேட்கிறோம் 'எமக்கு சலியாத மனத்தினைத் தா' என்று.

**மு.நா.நடராஜா, *நயினாதீவு.***

### ஏற்றமே தாராய்!

*பொங்கிடும் கடலில் தங்கிடும் தாயே!*
*புவனமீ ரேழை ஆண்டருள் வாயே!*
*சங்கர பீடத்தில் வீற்றிருப் பாயே!*
*சங்கரி சுமங்கலி சௌந்தரி நீயே!*
*புங்கவி பூரணி புராதனித் தாயே!*
*போற்றிசெய் அன்பந்தம் புகலிடம் நீயே!*
*இங்குள மாந்தந்தம் இன்னல்கள் பாராய்!*
*இன்றெமக் கருளி ஏற்றமே தாராய்!*

- கவிஞர் நயினை இராகுலன்.


தாயே சரணம்! நாகம்மாளே சரணம்!
☆ மங்கிடும் கண்களுக்குப் பொங்கிடும் பார்வை!
☆ மிதுப்புப் பற்களை அழகுறக் கிளிப் பொருத்துதல்!
☆ இழந்த பற்களைப் புதுப்பொலிவுடன் கட்டிடல்!
**எரிக் கணேஷ்**
பல்கட்டுமிடமும் மூக்குக்கண்ணாடியகமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-22622)

தேரில் ஆரோகணிக்கும் தேவியே சரணம்!
பக்ஸ், போட்டோப்பிரதிகள், லமினேற்றிங், ரைப்பிங்
முதலிய இன்னும் பல அளப்பரிய சேவைகளை
ஆனந்தமாய்ப் பெற்றிட
**ஸ்ரீ முருகன் கொம்பியூட்டர் சென்ரர்**
ஏஜென்சி தபாற்கந்தோர்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2670, 3214, 3588 FAX: 021-3214
(C-22611)

தாயே சரணம்! அம்மா சரணம்!
நீயே வந்து காத்தருள் புரிவாய்!
உங்கள் அழகையும் எழிலையும்
மெருகூட்டிட அரிய
நகைச் சுரங்கம் இது!
**அர்ச்சனா நகையகம்**
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-22634)

தேரிலே வரும் தாயே!
நேரிலே வரம் அருள்வாய்!
தகுதிவாய்ந்த கண் பரிசோதகர்களால்
இலவச கண்பரிசோதனை செய்து மூக்குக்
கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
**துஷா ஒப்ரிசன்ஸ்**
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.3461
(C-22614)

...யே! நயினை
...ஸ்வரியே!
...ோம் நமக்கருள்
...ய் அம்மா!
...கைகளுக்கு
...க வாய்ந்த
...ம்:
**...கை மாடம்**
...ுண் வியாபாரம்
...யேட்டர் அருகில்)
...தூரியார் வீதி,
...ப்பாணம்.
(சி-22631)

நயினை நாகேஸ்வரித் தாயே!
நமக்கு அருள்புரிய வேண்டும் நீயே!!
அம்பிகை தேரில் ஆரோகணிக்கும் திருக்காட்சி
கான வாரீர்.
மோட்டார் சைக்கிள், மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்கள் மற்றும் பல்பொருள்
வாணிபம், விமான – கப்பல் சேவை
யாழ். – கொழும்பு இணைந்த சேவையாகப்
பெற்றுக்கொள்ள
**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
வெஸ்ரேன் யூனியன் பணம் மாற்றுதல்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் Western Union Money Transfer ஊடாக யாழ்.குடாநாட்டுக்குப் பணம் அனுப்பினால் அன்றைய தினமே பணம் உரியவர்களுக்கு வழங்கப்படும்.
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2024, 2025
(சி-22609)

தேரேறி வரும் தேவியே!
தேரில் ஆரோகணித்து அருள்புரிவாய்!
சுத்தமான கலப்படமற்ற நல்ல
தரமான பொருள்களை
சகாய விலையில்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:

**S.V. முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-22604)

...ஆலயத்தில் அமர்ந்து
...யே! சரணம்! சரணம்!
...தம் புதிய சாறி
...க்கு நித்தம் நீங்கள்
... வேண்டியது
**...பிள்ளையும்**
**...மந்தர்களும்**
...பு அங்காடி,
... வீதி, யாழ்ப்பாணம்.
...021 - 2826

அம்பிகையே சரணம்!
நம்பி வந்தோம் அம்மா!

தரமான, சுத்தமான
சாப்பாட்டுக்குரிய
நல்லெண்ணெய்
வேண்டுமா?
நாடுங்கள்:
**V.S.P. லஞ்ச் ஒயில்**
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2785
(சி-22633)

நானிலம் போற்றித் துதிக்கின்ற
நாகபூஷணித் தாயே சரணம்!
நவீன மோஸ்தர்களிலான
ஆடை வகைகளுக்கும் சாறி
பிளவுஸ்பீஸ் வகைகளுக்கும்
என்றும்
மங்காப் புகழ்பெற்றவர்கள்
**மகாநதி புடவையகம்**
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(பிளவுஸ்பீஸ்களுக்கு பிரத்தியேகக் காட்சி அறை உண்டு.)
(சி-22610)

# நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

## 23-06-2002

# இரதோற்சவம் ஒரு விளக்கம்

பசுபதி ஆகிய சிவபெருமான் சூரிய சந்திரர்கள் உருண்களாகவும் மற்றைய சதம் அசரமாகிய பொருள்களாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அந்த அம்பின் கூர் வாயாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்த அசுரர்களை தமது திருப்புன் முறுவலால் எரித்தருளினார்.

விருது டுன்றமா மேருவி னாணா
வாவன வெரியம்பாற்
பொருது மூ வெயில் செற்றவன் பற்றிறின்
றுறைபதி யெற்றாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதி நின்றகே தீச்சரம்ங் கைதொழக்
கடுவினை யடையவே.

(திருஞானசம்பந்தர்)

திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலாங்களையும் கெடுத்தற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் சென்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியங்
அப்புரம் எய்தமை யாரறிவாரே."

*பதப்பொருள்:-*

அப்பு அணி செஞ்சமை ஆதி புராதனன் - நீரை அணிந்துள்ள சிவந்த சடையினையுடைய பழமையான வன், முப்புரம் சென்றனன் என்பர்கள் மூடர்கள் - மூன்று கோட்டைகளை அழித்தலாவது ஆணவம், கன்மம், மாயையாகிய மூன்று மலங்களை அழித்தலாம், அப்புரம் எய்தமை யார் அறிவார் - அவ்வாறு அக்கோட்டையை அழித்ததை யாரோ அறிய வல்லார்.



*விளக்கம்:-*

மும்மல காரியமாவன மும்மலங்களின் வலியை அழித்தல், திரிபுர சங்காரத்தின் தத்துவம் உணர்த்தியவாறு.

*கருத்து:-*

மும்மலங்களை அழித்தலே முப்புர தகனமாகும்.

*கிரியா சிரேஷ்ட குருமணி*
**சிவஸ்ரீ வை.மு.பரமாசாமிக்குரு**
*உத்தரகோவை.*

## நம்தேசம் விடிவுபெற நயினையில் தேரேறுகிறாள்

எழில் பொங்கும் ஈழத்தின் அருள்மிகு அன்னையாய்
எம்தேசம் தொழுதேற்ற தேரேறி வருபவளே
பொழில் சூழ்ந்த நயினைப் புவனேஸ்வரி பீடத்தில்
பூவேந்தி நாகம் வழிபட தேரேறி வருபவளே
அருள் பொழியும் தாயே! சித்திரபானு ஆண்டிலே
அன்னை மண்ணுக்கு நிரந்தர விடிவு வேண்டுமம்மா
தொழில்கொள் மாணடர் தொழுதேற்றம், தேவியே
தொடரும் பேச்சு சமாதானம் நிறைந்திட வேண்டுமம்மா

-மதுரகவி

## அகிலமதில் காத்திடம்மா அமைதி பொங்க

ஏதும் அறியாமல் இங்கே வாடுகின்றோம்
ஏற்றமிகு வாழ்வினை நாம் தேடுகின்றோம்
நீதிமுறை நெறி இங்கே பிரளலாமோ
நீயரசு செய்து அருள் பொழிகையிலே
ஓதியுனை உரை முடியாது அம்மா
ஓங்கார முதல்நெறியும் தெரியாது அம்மா
ஆதியருள் நயினையுறை நாகபூஷணி தாயே
அகிலமதில் காத்திடம்மா அமைதி பொங்க.

தென்புலோலியூர் **பரா.றமேஸ்**

## நல்லதொரு திருவிழா

"அலைகடல் சூழ் நயினையிலே திருவிழா
நாகம் பூசித்த 'அம்பிகைக்குப் பெருவிழா
அன்னை பூரணியைப் பரவியேத்தும் திருவிழா
கொடு வினைகள் அகல நாடும் பெருவிழா
நானிலம் போற்றும் நாகபூஷணியின் திருவிழா
பிணிகள், பீடைகளைப் போக்கியருளும் பெருவிழா
புவனம் பதினாறையும் காப்பவளின் திருவிழா
அன்னை அருட்புனலால் எமையணைக்கும் பெருவிழா
பரிமளப் பூங்கொடி தேரேறிவரும் திருவிழா
அடியவர் பரவசம் கொண்டு வடமிழுக்கும் பெருவிழா."

"நயினை விஜயன"

## நாகம்மாள் தேர்மருவி வருகின்றாள்

சீர்பெருகு சிறப்புகளும் திருவருளும் கொண்ட அருட்
தேர்மருவி வருகின்றாள் நாகம்மாள் - அவள்
திகழ்வடிவைப் பார்த்துள்ளம் தெளிவுபெற்று ஊழ்வினைகள்
மிகவிரைவாய் ஓட்டிடுவோம் பணியுங்களே.
ஊருலகில் உற்றவரும் உத்தமரும் சித்தர்களும்
சீருடனே பணிந்திடுவார் சேருங்களே!

-முருகனடியான்.


"அம்பிகையைச் சரண் அடைந்தால்
அதிகவரம் பெறலாமே"
நவநாகரிகமான தங்க நகைகளைச்
செய்து கொள்ள நீங்கள் நாடுமிடம் :
துர்க்கா நகைப் பூங்கா
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-22616)

அம்பிகையே அருள்வாய்!
அருளினையே தருவாய்!
அதி நவீன டிசைன்களில்
அழகு நகைகளை என்னம்போல்
தெரிவுசெய்திட நாடுங்கள்:
நிஷாந்தா ஜுவல்லறி
75,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-22616)

தேரில் வரும் தேவியே! எமக்கருள்புரிவாய் அம்மா! தாயே!
நீங்கள் வாங்கி விட்டீர்களா? மங்காப் புகழ்பெற்ற
மகிமை மிக்க L.G. ஸ்தாபனத்தாரின்
இலத்திரனியல் பொருள்கள்
இப்பொழுது யாழ்நகரில்!
L.G. குளிர்சாதனப் பெட்டிகள் (REFRIGERATOR) SINGLE DOOR /DOUBLE DOOR BOTTLE COOLER CHEST (DEEP) FREEZER
L.G. சலவை இயந்திரம் (WASHING MACHINE)
L.G. குளிரூட்டி AIR CONDITIONER
L.G. தொலைக்காட்சி [வர்ணம்] 20", 21"
L.G. FLATRON தொலைக்காட்சி [வர்ணம்] 21"
L.G. MICROWAVE OVEN
அத்தோடு
மின்விசிறிகள், மின்அலங்கார விளக்குகள், கிறைண்டர்
முதலான அனைத்து மின் உபகரணங்களுக்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்:
JAFFNA ELECTRICALS
யாழ்ப்பாண மின்னகம்
06(94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.2353
ABANS LTD. இன் அங்கீகார முகவர் (சி22602)

தேரிலே எழுந்தருளி நேரிலே
வருந் தாயே!
வரமருள வேண்டும் நீயே!
நிறமும் தரமும் நிரந்தரம்!
சானுகா 50
நகைமாடம்
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 3700
(சி-22630)

ஸ்ரீ நாகபூஷணித் தாயே!
நல்வரம் அருள்வாய் நீயே!
தங்க நகை உலகில் சரித்திரம்
படைத்தவர்கள்!
நம்பிக்கை, நாணயம்,
தரம், உறுதி,
உத்தரவாதம்மிக்க
அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்:
நியூ சோபிதா நகை மாடம்
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-22617)

நாகபூஷணி அம்பிகையே!
நலந்தருவாய் நமக்கு அம்மா!
தேரில் ஆரோகணித்துத் தேவியே வரமருள்வாய்!
☆ காலத்துக்காலம் ஈடிணையற்ற
நவநாகரிகமான
புத்தம் புது டிசைன்களில்
தங்க வைர நகைகளைத் தரமாகப் பெற்றிட
தனக்கெனத்
தனியிடம் வகுத்து நிற்பவர்கள்:
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/22627)

# கண்காணிப்புக் குழுவின் புலிகள் தரப்பு உறுப்பினர்கள் மீது அரசு பாரபட்சம்!

## கொடுப்பனவுகள், கடமை லீவுகள் எதுவும் இல்லை

காரைதீவு,ஜூன்23

இலங்கை கண்காணிப்புக் குழுவில் உள்ள புலிகள் தரப்பு உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்; பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்று புகார் கூறப்படுகிறது. அரசாங்கத் தரப்பு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவும் லீவுகள் போன்ற அனுகூலங்களும் புலிகள் தரப்பு உறுப்பினர்களுக்கு இல்லை. அவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள்கூட வழங்கப்படவில்லை.

இலங்கை கண்காணிப்புக் குழுவில் மூன்று தரப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். சர்வதேசத் தரப்பினராக நோர்வே அரசு பெயர் கொடுத்த வெளிநாட்டவர்களும் இலங்கை அரசாங்கத் தரப்பினராக இலங்கை அரசு பெயர்கொடுத்த இலங்கையர்களும் புலிகள் தரப்பினராகப் புலிகள் பெயர் கொடுத்த இலங்கையர்களும் இருக்கிறார்கள்.

சர்வதேசத் தரப்பினரான வெளிநாட்டவர்களின் விஷயம் வேறு. இலங்கையர்களான அரசு தரப்பினரிலும் புலிகள் தரப்பினிலும், புலிகள் தரப்பு உறுப்பினர்கள் அரசினால் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று புகார் கூறப்படுகிறது.

அரசதரப்பு உறுப்பினர்களுக்கு உள்ள கொடுப்பனவுகள், உரிமைகள், சலுகைகள் அனைத்தும் புலிகள் தரப்பு உறுப்பினர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

மாவட்டத்துக்கு இருவர் வீதம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய ஆறு மாவட்டங்களிலும் 12பேர் புலிகள் தரப்பு உறுப்பினர்களாகக் கடந்த மூன்று மாதங்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள்.

இவர்களில் நான்கு பேர் இப்போதும் அரசாங்க அதிகாரிகள், ஒருவர் பொறியியலாளர், இருவர் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றொருவர் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி மற்ற 8பேரையும் போல இந்த நால்வருக்கும் இன்னும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை. கண்காணிப்புக் கடமைகளை மேற்கொள்வதற்காக இவர்களுக்கு இவர்களின் வழமையான அரசாங்கப் பதவிக் கடமைகளிலிருந்து விலக்கு அளித்துக் கடமை லீவு வழங்கப்படவில்லை.

அதனால் கண்காணிப்புக் கடமைக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் இவர்கள் லீவு எடுக்கவேண்டியிருக்கிறது. அதிகம் லீவு எடுத்தால் சம்பளத்தில் வெட்டு விழும்.

அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கண்காணிப்புக் கடமைகளுக்காக மாதந்தோறும் 30 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தொலைபேசி வசதிகளும் வழங்கப்படுகின்றன.

இவற்றில் ஒன்று கூட புலிகள் தரப்பு உறுப்பினர்கள் எவருக்கும் கிடைக்கவில்லை.

தான் பெயர் கொடுத்து உறுப்பினர்களாக்கியவர்களுக்கும் புலிகள் பெயர் கொடுத்து உறுப்பினர்கள் ஆக்கியவர்களுக்குமிடையே அரசாங்கம் ஏன் இப்படிப் பாகுபாடு காட்டுகிறது. ஏன் அவர்களை ஓரம்கட்டி நடத்துகிறது என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

கண்காணிப்புக் குழுவில் உள்ள புலிகள் தரப்பினரை மனமுடைந்து போய் வெளியேறச் செய்வதற்கு இது அரசு கையாளும் ஒரு தந்திரமாக இருக்குமோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு எம்.பிக்கள் அடுத்தமாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசும்போது இந்த விடயத்தை எழுப்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புலிகளின் கவனத்துக்கும் இந்த விவகாரம் கொண்டு வரப்படுகிறது.

(ஐ)

## 'நெஞ்சுறுத்தும் கானல்' தென்மராட்சி பாடசாலைகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்23

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மிதிவெடி விழிப்புணர்ச்சித் திட்டத்தின்கீழ் 'நெஞ்சுறுத்தும் கானல்' என்னும் நாடகத்தை தென்மராட்சிப் பிரதேசத்தில் மேடையேற்றி வருகின்றது.

இந்த வகையில் எதிர்வரும் 25ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு மந்துவில் பாரதி வித்தியாலயத்திலும் 26ஆம் திகதி 11 மணிக்கு வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் 27ஆம் திகதி 11 மணிக்கு கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திலும் -

அடுத்த மாதம் 2ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு கைதடி, நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலையிலும் மேற்படி நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

(எ-ரி)

## சிலப்பதிகார மூன்றாம் நாள் நிகழ்வில் கௌரவிப்புப் பெறுவோரின் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

நாளை திங்கட்கிழமை நடைபெறும் சிலப்பதிகாரம் ஆய்வரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வுகளில் கௌரவிப்புப் பெறும் இந்துக்குருமார் மற்றும் பாடசாலை உபகரணம் பெறும் ஆதரவற்ற இந்து மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரதேச செயலர்ரீதியாக குருமா விவரம் வருமாறு:

**கரவெட்டி**

தி.சிவசுப்பிரமணியசர்மா, க.கல்யாணசுந்தரக்குருக்கள், அ.அண்ணாசாமிக்குருக்கள், தி.சதாசிவசர்மா, இசுப்பிரமணியக்குருக்கள், தியாகராஜக்குருகள், நா.கணேசஐயர், க.சுப்பிரமணியக்குருக்கள், தி.கனகசபாபதிசர்மா, செ. அருணாச்சலஐயர், ம.கிருஸ்ணஐயர்.

**மருதங்கேணி**

தி.வைத்திலிங்கக்குருக்கள், இ.கந்தசாமிக்குருக்கள், ச.இரத்தினசபாபதி சர்மா, செ.பஞ்சாட்சரக்குருக்கள், இ. நாராயணசர்மா.

**சாவகச்சேரி**

சி.சிதம்பரநாதக்குருக்கள், இ.சுப்பிரமணியக்குருக்கள், வை.சுப்பிரமணிய ஐயர், செ.பரமானந்தக்குருக்கள், ப. சோமஸ்கந்தசர்மா, கு.ஸ்ரீகாந்தக்குருக்கள், யோ.குருசாமிக்குருக்கள், பொ. ஐயாத்துரைக்குருக்கள், மா. குமாரசாமி ஐயர், க.சுப்பிரமணியக்குருக்கள், த. வீரபத்திரஐயர்.

**பருத்தித்துறை**

பா.வைத்தியநாதக்குருக்கள், ஐ. வேதக்குட்டிக்குருக்கள், சோ. சிவசிதம்பரக்குருக்கள், பொ.ஸ்ரீபதிசர்மா, ச.தியாகராசக்குருக்கள், தி.வைத்திலிங்க ஐயர், மு.பாலசுப்பிரமணியக்குருக்கள், ஐ.லிங்கோற்பவநாதர், ச.வேதாரண்யக்குருக்கள், க.ஆறுமுகசாமி ஐயர், சி.சிவகாமிஐயர், க.சோமசேகரக் குருக்கள்.

பிரதேசசெயலர் பிரிவுரீதியாக உபகரணம் பெறும் மாணவர் விவரம் வருமாறு:

**பருத்தித்துறை**

இ.கார்திகா, இ.பாலதி, ச.ஜோதினி, வே.ஆனந்தரூபா, வி.நரேஜினி, அ. வினோராஜன், ச.குகதாஸ், ச.ரேகா, தே.மேரியசிந்தா, சா.சிந்துஜா, ஜீ.துஷ்யந்தி, மா.தனுசனா, நா.கல்யாணி, நா.கௌதமி, இ.இந்துசா, ந.பிரதீபா, மு.பூமலர், அ.அமிர்தராஜ், செ.மரிஸ்ரெலா, ப.நிஷாந்தன்.

**மருதங்கேணி**

க.விதுர்சன், சி.பூபதி, சி.விசயதீபா, ம.தணிசா, த.நேசகுமார், ச.நெல்சன் றெஜினோல், வ.பிரதீப், மு.அருள்மொ, ஆ.சீதாமலர், அ.சிறீகரன், த.சசிகலா, மா.பிரபாகரன், சி.றெஜி, செ.பாலகோபி, சி.ஜெயசீதா, ர.றோசிகா, ர.மயூரன், சுவினோதா, இ.இலட்சுதன், பா.செந்தூரன்

**தென்மராட்சி**

கி.யதுசா, கி.தாரகன், வி.யாழேந்திரன், வி.யாழினி, எஸ்.புருசோத்தமன், எஸ்.சடகோபால், பா.நிர்மலன், ந.திருக்குமரன், பா.சிவசுதன், இ.மேகநாதன், ப.சுதாகரன், வா.குகேந்தினி, எஸ்.ஞானசவுந்தரி, எஸ்.சர்மிளா, நா.தயாளன், க.மயூரன், அ.நிரோசன், கி.விதுசா, இ.உதயரூபன், வா.கயந்தா, ர.சசிகலா, ச.தனுஷன், சு.சபேஸ், ந.ஜெகதீஸ், சி.சசிதாரணி, ம.சுகன்யா,

**கரவெட்டி**

பா.நிதர்சன், ச.சுதாமதி, ப.நளினன, ப.சிவரூபன், கு.துசிலியா, வி.நிரோஜினி, து.பிரசாத், ப.பிரசாத், சி.சிறிதரன், மு.கலைரதன், செ.சாந்தகுமார், க.சாந்தினி, த.சபேசன், க.கணிசன், இ.செந்தமிழ்ச்செல்வன், ந.உதயகுமார், சே.தனீஸ்வரன், ச.சாந்தரூபன், செ. உஷா, தர்ஜீபன். (எ)

# மீண்டும் ஓர் அருட்பொழிவு

யாழ்ப்பாண கத்தோலிக்க மறை மாவட்டத்திற்கு அண்மையில் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள அருள்திரு. அகஸ்ரின் முண்டக்காட் அடிகள் குழுவினரின் இறைதியான குணமாக்கல் வழிபாடுகள் ஆகும்.

யூன் 18ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதிவரை இவர்கள் யாழ். மறைமாவட்டத்தின் கிளி-முல்லை மறைக்கோட்டம், யாழ் மறைக்கோட்டம் ஆகிய இரண்டு மறைக்கோட்டங்களில் தூய ஆவியின் அருள்ட் பொழிவினை அள்ளிவழங்கி வருகின்றார்கள்.

அண்மைக் காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் மிகவும் பிரபல்யம் பெற்று தூய ஆவியின் வரங்களை அள்ளிப் பொழிந்து குணமாக்கல் வழிபாடுகளை நடத்தி வருபவர்கள் இறைதியான இல்ல (Divine Centre) குணமாக்கல் வழிபாட்டுக் குழுவினராவர். இலங்கையிலிருந்து குருக்களும் துறவிகளும் பொது நிலையினரும் இந்தியாவிலுள்ள கேரளா மாநிலத்தின் முரிங்கூர் என்னுமிடத்திலுள்ள போட்டா ஆச்சிரமத்துக்கு சென்று இறைதியான குணமாக்கல் இல்லத்தினரின இறையனுபவத்தை பெற்று வந்துள்

**அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

ளனர். இருப்பினும் பொதுமக்கள் அனைவரும் அங்கு செல்வது முடியாத காரிய மாகையால் மிக நீண்ட கடின உழைப்பின் பின்னர், அவர்களை இங்கே கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் அருள்திரு அகஸ்ரின் முண்டக்காட் அடிகளாரின் குழுவினர் வந்து யாழ்.குடாநாட்டில் இறைதியான குணமாக்கல் வழிபாடுகளை நிகழ்த்தி யாழ் மறைமாவட்டத்தை புதுப்பித்து புத்துணர்வுடன் செயற்பட வழிவகுத்தார்கள். அவ்வேளை இறை தியான இல்லத்தினரின் குணமாக்கல் வழிபாடுகளால் பயன் பெற்றோர் அநேகம் பேர். தமது உடல், உள நோய்களில் இருந்து விடுதலை பெற்றோர் அனேகம் பேர். இவ்வழிபாடுகளின் பின்னர் அவர்கள் கொடுத்த சாட்சியங்ளில் இருந்தும் நிகழ்ந்த புதுமைகளில் இருந்தும் இதனைத் தெளிவாய் அறியக்கூடியதாகவிருந்தது.

புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடந்த இறுதி திருவிழிப்புக் குணமாக்கல் வழிபாட்டு நிகழ்வில் 40 ஆயிரத்திற்கு அதிக மானவர்கள் பங்கு பற்றி இருந்தார்கள். 700 இற்கு அதிகமானவர்கள் அந்த நிகழ்விலேயே குணமாகி இறைவனின் அருள் வரத்தை பெற்றுக்கொண்டனர். இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கின்றபோது கடந்த ஆண்டின் இறுதியில் நிகழ்ந்த இறைதியான இல்ல குணமாக்கல் வழிபாடுகள் உண்மையிலே யாழ். மறை மாவட்டத்தை புதுப்பிக்கவும் புதுவழியில் நெறிப்படுத்தவும் கிடைத்த ஆவியின் அருட் பொழிவு என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்போ நடந்து கொண்டிருந்த கொடிய போரினாலும் அதன் குழப்பங்களாலும் கிளி-முல்லை மறைக்கோட்டத்திற்கு இக்குழுவினரை அழைத்துச்செல்லக்கூடிய வாய்ப்புக் கிட்டவில்லை. இறைவன் அருளால் இவ்வருடமும் மீண்டும் இவர்களை யாழ்.மறை மாவட்டத்திற்கு குணமாக்கல் வழிபாடுகளுக்கு அழைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது கிளி-முல்லை மறைக்கோட்டத்தினருக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

18ஆம் திகதி யூன் மாதம் தொடங்கியுள்ள இக்குணமாக்கல் வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யூன் மாதம் 26ஆம் திகதி புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கும் இறைதியான திருவிழிப்பு வழிபாடுகளோடே இக்குணமாக்கல் வழிபாடுகள் நிறைவு பெறவுள்ளன.

18ஆம் திகதி வருகைதந்த இவர்கள் அன்றைய தினம் அமதிபுரத்தில் குருக்கள், துறவிகளுக்கான வழிபாடுகளை நிகழ்த்தினர். இதன் பின்னர் 19ஆம் திகதி மல்லாவியிலும் 20ஆம் திகதி முழங்காவிலிலும் 21ஆம் திகதி கிளிநொச்சியிலும் 22ஆம் திகதி முல்லைத்தீவிலும் குணமாக்கல் வழிபாடுகள்ள நிகழ்த்தியுள்ளனர். 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை (இன்று) மாபெரும் திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு இரவு 7.00 மணிமுதல் அதிகாலைவரை புதுக் குடியிருப்பில் நிகழ்த்துவர்.

அத்தோடு கிளி-முல்லை மறைக்கோட்டத்தில் தம் பணிகளை நிறைவு செய்துகொண்டு யாழ் மறைக்கோட்டத்திற்கு வருகைதரவுள்ள இவர்கள் 24ஆம் திகதி குருக்கள், துறவிகளுக்கான குணமாக்கல் வழிபாடுகளை ஆயர் இல்லத்திலும் 25ஆம் திகதி பருத்தித்துறை தும்பளையிலும் நிகழ்த்துவார்கள். 26ஆம் திகதி மாலை 7.00 மணிமுதல் அதிகாலைவரை மாபெரும் திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடுகள் யாழ். பத்திரிசியார் கல்லூரி மைதானத்தல் இடம்பெறும்.

கடந்த முறையைப்போல இம்முறையும் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் திருவிழிப்பு வழிபாடுகளில் அனேக மானவர்கள் பங்குபற்றி தம் உடல், உள நோக்காடுகளில் இருந்து விடுதலை பெற்று ஆவியின் குணமாக்கல் அனுபவத்தை பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தடவை எமது பிரதேசங்களில் அமைதியும், சமாதானத்திற்கான சமிக்கைகளும் தோன்றியுள்ள வேளையில் தம் உடல், உள நோய்களில் இருந்து குணமாக்கப்பெற இச்சந்தர்ப்பம் கிடைத்திருப்பது உண்மையிலேயே இறைவனின் செயலாகும். மிக நீண்ட காலமாக ஞானவிதமான புத்துணர்வையும் புதுப் பொலிவையும் பெறமுடியாதிருந்த யாழ்.மறை மாவட்டத்திற்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். இது போனற நிகழ்வுகள் போர் ஓய்ந்த பின்னர் போரின் விளைவுகளில் இருந்து

**ஞாயிறு நற்பிரசாதம்**

உளவியல் ரீதியாக குணமாக்கப் பெற இன்னும் அதிகம் தேவை.

ஒவ்வொரு தடவையும் இந்தியாவில் இருந்து அழைத்து வரக் கூடிய வசதியும் வாய்ப்பும் இப்போ கிடைத்திருக்கிறமையால் அதனை முழுமையாக பயன்படுத்துவோம். ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதமாகவும், குடும்பமாகவும், பங்கு ரீதியிலும், மறை மாவட்ட ரீதியிலும் குணமாக்கப் பெற இவ்வரிய சந்தர்ப்பத்தையும் இனி வரும் சந்தர்ப்பங்களையும் முழுமையாக பயன்படுத்த வேண்டும். போரின் அழிவுகள், அழுத்தங்கள், கசப்பான நினைவுகள், இழப்புக்கள், இறப்புக்கள் அனைத்திலிருந்தும் விடுதலைபெற இறைதியான குணமாக்கல் வழிபாடுகள் நிச்சயம் தேவை. அவற்றை முழுமையாக பெற்றுக் கொள்வதும் பயன்படுத்திக் கொள்வதும் ஒவவொருவர் மேலும பொறிக்கப்பட்டுள்ள பாரிய கடமையாகும். இதனைச் செய்கின்றபோதே நாம் முழுமையான விடுதலை அடைய முடியும்.

ஞானத்தின் ஆவியை அனுப்பிவையும், சமாதானத்தின் ஆவியை அனுப்பிவையும், ஆற்றலின் ஆவியை அனுப்பிவையும், ஞான ஊற்றான ஆவியை அனுப்பி வையும், இறைவாக்கின் ஆவியை அனுப்பிவையும், மொழி பேசும் ஆவியை அனுப்பிவையும், நோய் தீர்க்கும் ஆவியை அனுப்பிவையும், பேயோட்டும் ஆவியை அனுப்பிவையும், அன்பின் ஆவியை அனுப்பிவையும், கனி தரும் ஆவியை அனுப்பிவையும், தேற்றிடும் ஆவியை அனுப்பிவையும், உம்மைப் போற்றிடும் ஆவியை அனுப்பிவையும், என்ற ஆவியின் விடுதலைக் கீதத்தை நாமும் பாடுவோம். ☆

## சேது சமுத்திரத் திட்டப்பணி அடுத்த ஆண்டில் ஆரம்பமாகும்

சேது சமுத்திர திட்டப் பணிகள் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படும். இந்திய மத்திய அரசாங்கம் நேற்றுமுன்தினம் இதனை அறிவித்தது. இந்தத் திட்டத்தின் நடைமுறைச்சாத்தியங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த ஆய்வுகள் நிறைவடைந்திருக்கின்றன என்று மத்திய கப்பற் போக்குவரத்துத்துறை அமைச்சர் வேனுபிரகாஷ் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவின் கிழக்கு, மேற்கு துறைமுகங்களுக்கு இலங்கையைச் சுற்றிச் செல்லாமல் பாக்குநீரிணை வழியாக இந்தியக் கப்பல்கள் பயணஞ்செய்ய சேதுசமுத்திரத் திட்டம் வழிவகுக்கும்.

இத்திட்டம் நிறைவேற்றப்படவேணடும் என்று தமிழ்நாடு அரசாங்கங்கள் நீண்டகாலமாகக் கோரிவருகின்றன.

## இளவாலை - சீந்திப் பந்தலில்

## மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் புதிய மயானம் அமைப்பு

சண்டிலிப்பாய்,ஜூன்23

இளவாலை சீந்திப் பந்தல் என்ற இடத்திலுள்ள மக்கள் தமது பகுதியிலுள்ள ஓரிடத்தில் இறந்தவர்களின் பிரேதங்களை எரியூட்டி வருவதால் தாங்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதாகவும், இதனைத் தடுத்து நிறுத்துமாறும்கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இளவாலைத் துறை கடற்கரைக்கு சமீபமாக பாவனையிலிருந்து வந்த இப்பகுதி மக்களுக்கான இந்து மயானம் மக்கள் நடமாட முடியாத இடமாக, பாதுகாப்பு பிரதேசமாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இதனால் கடற்படையினர் இந்த இந்து மயானத்தை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த பலவருடகாலமாக இம்மயானம் கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது. இதனால் இங்குள்ள இந்துசமய மக்கள் இறந்தவர்களின் சடலங்களை இளவாலை சீந்திப் பந்தல் என்ற இடத்தில் வைத்துத் தகனம் செய்து வருகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளினால் இப்பகுதியில் தற்போது மீளக்குடியேறியுள்ள மக்களின் சுற்றாடல், சுகாதாரம் பாதிப் படைந்துள்ளதுடன் வேறும் சில பாதிப்புகளுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இங்கு தகனம் செய்வதை தடுத்து நிறுத்துமாறு இச் சுற்றாடலில் வசிக்கும் மக்கள் இளவாலை வடமேற்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-135)

# இந்துப் பண்பாட்டு நிதியம் - ஆளுநர் சபை

1985, 31ஆம் இலக்க இந்துப் பண்பாட்டு நிதியச் சட்டமூலத்தின் 3 பிரிவுக்கமைய தமக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் பின்வரும் உறுப்பினர்களை இந்துப் பண்பாட்டு நிதியத்தின் ஆளுநர் சபைக்கு நியமனம் செய்துள்ளார்.

01. திரு.கந்தையா பரமேஸ்வரன் (இ.நி.சே1) - தவிசாளர், உறுப்பினர், செயலாளர், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு.
02. திரு.தேவமனோகரன் சுவாமிநாதன் (சட்டத்தரணி) - உறுப்பினர்
    தலைவர் - தேசிய சேமிப்பு வங்கி
    அறங்காவலர், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்
03. திரு.பொன்னுத்துரை வல்லிபுரம் (ஜே.பி.)
    ஓய்வுபெற்ற சுங்க அதிகாரி - உறுப்பினர்.
    அறங்காவலர் ஸ்ரீ மயூராபதி ஆலயம்
04. திரு.சின்னத்துரை தனபாலா (ஜே.பி.)
    இயக்குநர், லீலா குருப் நிறுவனங்கள் - உறுப்பினர்
    துணைத் தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம், சைவ முன்னேற்றச் சங்கம்.
05. திரு.வைத்திலிங்கம் சிவராஜா - உறுப்பினர்
    இயக்குநர் சிவா ரேடிங் கம்பனி
06. திரு.ஐயாத்துரை திருஞானசம்பந்தன் - உறுப்பினர்
    செயலாளர், உலக அமைதி நிறுவனங்கள்
    ஆயுட்கால உறுப்பினர், கொழும்பு விவேகானந்தா சபை.
    உறுப்பினர் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்.
07. திரு.க.பரமலிங்கம் (இ.நி.சே.1) - உறுப்பினர்
    மேலதிகச் செயலாளர், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
08. திருமதி சாந்தி நாவுக்கரசன் (இ.நி.சே 1) - உறுப்பினரும் பிரதம நிர்வாக உத்தியோகத்தரும், பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மேற்படி சபை 06.10.2002ஆம் திகதியிலிருந்து இயங்கத் தொடங்கவுள்ளது. இந்து பண்பாட்டு நிதியத்தின் முகவரியும், தொலைபேசி இலக்கமும் கீழ்வருமாறு:

**தவிசாளர்,**
இந்து பண்பாட்டு நிதியம்
இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு.
248 2/1, காலி வீதி,
கொழும்பு 04.

Tel: 554804, 552641, 552643.
Fax: 554805, 552825.
E-Mail: param@Hinduministry.lk. shanthy @hinduministry.lk.
Website: hinduministry.lk.

**க.பரமேஸ்வரன்**
செயலாளர்,
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு. (C/22571)

## மூன்று விபத்துக்களில் மூவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூன்23

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் மூவர் காயமடைந்தனர்.

கொக்குவில் பொற்பதி வீதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணிக்கு இடம்பெற்ற ஓட்டோ - சைக்கிள் ஆகியவை மோதிக்கொண்ட விபத்தில் சைக்கிளில் சென்றவரான கொக்குவிலைச் சேர்ந்த ப.சுகந்தினி (வயது 22) என்பவரும் -

கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான கந்தையா - தங்கராசா (வயது 42) அவரது மகனான தங்கராசா கபிலன் (வயது 9) என்பவர்களுமே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த மூவரும் சிகிச்சைககாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15-ரி)

## செஞ்சிலுவை உப அலுவலகம் மூடப்படுகிறது

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பருத்தித்துறை உப அலுவலகம் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் மூடப்படுவதாக செஞ்சிலுவை சர்வதேச குழுவின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

வடமராட்சி மக்கள் தங்களுடைய தேவைகள் தொடர்பாக செஞ்சிலுவை சர்வதேச குழுவின் பாதுகாப்பு மற்றும் தேடுதல் செயற்பாடுகளான காணாமற்போனோர் சம்பந்தமானவை, குடும்ப தொடர்பினை மீளிணைத்தல் மற்றும் அவசர செய்திகளான இறப்பு மற்றும் கடும் சுகயீனம் முதலானவைகளை பிற இடங்களுக்கு அனுப்புதல் போன்றவற்றுக்கு 120, கோயில் வீதியில் அமைந்திருக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தை நாடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.


புதியகோலத் தயாரிப்பு
ஜெசித்தாராவின்
குங்குமப்பூ புரியாணி
&
சிப்சிக்கன்
அதிகசுவை - புதுப்பொலிவு
ஜோ - எக்டனின்
ஜெசித்தாரா
19/3. கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை
(5015) கண்டுக்குளி யாழ்ப்பாணம்.



# கடை வாடகைக்கு

நெல்லியடியில் பிரதான வீதி முதலாம் குறுக்குத் தெருவில் வண்ண மாடத்துக்கு அண்மையில் ஒரு சிறிய கடை (100. ச. அடி) வாடகைக்கு உண்டு.

விவரங்களுக்கு:
ம.மன்னன்
நெல்லியடி, கரவெட்டி. தொ.பே. இலக்கம் 63243) (5114)



# ACCESS சோலர் சென்ரர்

மின்பிறப்பாக்கி விலை

| BULB மின்குமிழ்களின் எண்ணிக்கை | விலை |
|---|---|
| 5 மின் குமிழ் | 41,625 |
| 7 மின் குமிழ் | 52,875 |
| 8 மின் குமிழ் | 55,687.50 |
| 9 மின் குமிழ் | 78,750 |
| 10 மின் குமிழ் | 84,375 |
| 12 மின் குமிழ் | 99,000 |
| 15 மின் குமிழ் | 106,875 |

கொழும்பில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட ACCESS சோலர் நிறுவனத்தினர் தங்கள் சேவையை யாழ். மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளனர். ஜேர்மன், ஆஸ்திரேலியா இணைத் தயாரிப்பிலான சோலர் மூல மின் ஒளி பிறப்பாக்கியை இலங்கை வங்கியில் கடன் அடிப்படையில் யாழ். மக்களுக்கு வழங்க அதிகாரம் பெற்றுள்ளனர். 25% உடன் காசுடன் மீதி 75% 12, 18, 24 மாத கடன் அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

- இத்துடன் மேலதிக இணைப்பாக 14" தொலைக் காட்சிப்பெட்டி, வானொலி இணைக்கமுடியும்.
- பொருத்துதல் பராமரிப்பு செலவு இலவசம்.
- 25 வருட உத்தரவாதம்
- ஆபத்து ஏதும் இல்லை.
- விவரங்கள் எல்லா இலங்கை வங்கிக் கிளைகளிலும்

எமது விலாசம்: ACCESS SOLER CENTER,
No.79, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P. 021-2405 FAX - 021-2171
மேலதிக விவரங்களுக்கு - ஜெயா அழகுமாடம்,
149, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (5051)


# நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 11 - 1972 | 13 - 02 - 2002 |

## செல்வி கந்தையா தயாவதி

கண்ணாக எமக்கிருந்த அன்புச்சிலையே!
கணப்பொழுதில் எமைக் கண்கலங்க வைத்தாய்!
காலங்கள் பல கடந்தோடிப் போனாலும்
கலைந்து போய்விடாதம்மா உன் நினைவு!

இன்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காந்தியூர், புலோலி வடமேற்கு. (5075)

பிரிவால் துயருறும்: தந்தை, தாய், சகோதரர்கள், உறவினர்கள்.

# இதயத் தாமரையில் ஈராண்டு நினைவலைகள்



| அன்னையின் மடியில் | அரன் அடியில் |
|---|---|
| 1914 - 04 - 14 | 2000 - 06 - 15 |

## திருமதி நாகமுத்து சிதம்பரப்பிள்ளை

திதி:பூர்வபக்க சதுர்த்தசி

இகமதிலே உமைப்பிரிந்து ஈராண்டாகி
இதயமதில் இணைந்திருக்கும் எங்கள் அம்மா!
அன்பு எனும் தேனமுதைச் சொரிந்துவிட்டு
அறியாத உலகமதில் வாழ்கின்றீரோ?
நீர் நடந்த பாதைதனை நினைக்கும் போழ்து
நெஞ்சமெல்லாம் நெருப்பாக வேகுதையோ!
காலமெல்லாம் எங்களுடன் இருப்பீரென்ற
கனவெல்லாம் கண்ணீரின் கதைகளாமோ?
பொல்லாத புவிதனிலே எம்மைவிட்டுப்
பொலிவுடனே புது உலகம் போய்விட்டீரே!
எண்ணற்ற பிறவிதனை எடுத்த போழ்தும்
எழில் நிறைந்த உமதுருவம் எங்கே காண்போம்?

திருமதி இ.சபாரெத்தினம் (மகள்)
மந்துவில், கொடிகாமம்

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் (4977)


புதிய போரோ சொப்ட்




Raj Advertising

மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாழை...
கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

(C/22656)

# எங்கள் நாட்டைக் கட்டியெழுப்பிய பலம்

# லங்கா சிமெந்து

இப்பொழுது,
நாடெங்கும் விற்பனையில் உள்ளதை
பெருமையுடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.




விபரங்கள்:

## லங்கா சிமெண்ட் லிமிட்டட்

இல. 130, 7 வது மாடி,
டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: 01-541358, 01-447746, 01-342063
தொ. நகல்: 447541
ஈ-மேல்: lclcemen@sltnet.lk
தொழிற்சாலை: கீரிமலை வீதி, காங்கேசன்துறை.
Sales Hotlines: 077 712277, 077 712288, 077 712299

தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு ஸ்தாபனம்

(சி22583)

## மரங்கள் தேவை

அந்திரான் பதியுறை முருகப் பெருமானுக்கு ஒரு சித்திரத் தேர் செய்வதற்கு முதிரை, தேக்கு, மருது, பலா ஆகிய மரங்கள் தேவையாக உள்ளன வைத்திருப்போர் கோயில் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.

முகவரி: செயலாளர், அந்திரான் முருகமூர்த்தி கோயில் பரிபாலனசபை, நவாலி மானிப்பாய்.

கோயில் பரிபாலன சபை,
நவாலி.

(51..)


## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
18 - 12 - 1983



தாயக மண்ணில்
23 - 06 - 2001

### செல்வன் செல்வராசா கார்த்திக்

(லெப்டினன்ட் தமிழ்வேந்தன்)

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி நிலவே! - எங்கள்
கார்த்திக்கே நாம் எந்நாளும் உந்தன் நினைவே!
சொந்த மண்ணை மீட்கத் துணிந்தாய் - நீ
... முற்றும் அறவே துறந்தாய்
...ாய் மண்ணில் வித்தானாய் - நீ
... ஈழத்தமிழர்களின் பெருஞ் சொத்தானாய்!

இன்று (23-06-2002) ஞாயிற்றுக்கிழமை
அவரின் நினைவஞ்சலி நிகழ்வுகள் வன்னியில் நடைபெறும்.
ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்:

7/1, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்

தாய், தந்தை, சகோதரர்கள்,
சகோதரிகள்

(5123)


உ

யாழ்ப்பாணம்
புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின்
அனுசரணையுடன் நடைபெறும்

## அருணகிரிநாதர் விழா (2002)

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : நாளை (24.06.2002) திங்கட்கிழமை
தலைவர் : பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா

### நிகழ்ச்சிகள்

சொற்பொழிவுகள் : "அருணகிரிநாதரும் அனுபூதியும்"
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
"பாடும்பணியே பணியாய் அருளாய்"
திரு ச.லலீசன்
(ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)

இசையரங்கு : திருப்புகழ்
குரலிசை : செல்வன் க.கருணேசன்
யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவன்
(பக்கவாத்திய சகிதம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சந்நிதியான் ஆச்சிரம சைவ
கலைபண்பாட்டுப் பேரவையினர்.

(C/22660)


## விமானக்கட்டணம் மீளளிப்பு

'ஹெலி ரூர்ஸ்' நிறுவனத்தில் விமான பயண ரிக்கெட்டுகளைப்பெற்று பின்னர் பயணம் செய்யாதவர்களுக்கான கட்டணம் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவுகளை மீளளிப்பதற்காக 'ஹெலி ரூர்ஸ்' நிறுவனத்தின் யாழ்.அலுவலகம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்திருக்கும் எனவும்.

சம்பந்தப்பட்டவர்கள் அன்றைய தினம் தமது கொடுப்பனவுகளைப் பெறுக் கொள்ளலாம் ... நிறுவன அதிகாரி றொபின்சன் அறிவித்துள்ளார். (எ-9)

## மிதிவெடியில் சிக்கிய டிராக்டர்

சாவகச்சேரி,ஜூன்23

மட்டுவில்- வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய கொட்டை மரத்தடி வெளிப்பகுதியில் உள்ள வயலில் உழுது கொண்டிருந்த டிராக்டர் மிதிவெடியில் சிக்கியதில் உழவு இயந்திரத்தின் பெரிய சில்லு ரயர் வெடித்துச் சிதறியது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றது. மட்டுவில் வடக்கு எஸ். நடராசா என்பவரது உழவு இயந்திரமே மிதிவெடியில் சிக்கியது. இச்சம்பவத்தில் உழவுஇயந்திர சாரதி காயங்கள் ஏதுமின்றி தப்பிக்கொண்டார்.(ம-31)


யாழ்.கல்வி நிலையம்
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
ENGLISH SPOKEN AND GRAMMAR
By: RAJAH
ஆரம்பம் இன்று 23.06.2002
(ஞாயிறு) 4.30 p.m.
(5129)

### மலிவு விற்பனை

பாம்ரீ, செவ்வரத்தை, குறோட்டன், அந்தூரியம் (சிவப்பு), சைப்பிறஸ், நல்லினப் பெரிய றோஸ் பூக்களுடன் விற்பனைக்கு உண்டு.

பூங்கனிச்சோலை,
திருநெல்வேலி. T.P.2976
பூந்தோட்ட வேலைக்கு ஆள்கள் தேவை.
(5127)

### காணி உடனடி விற்பனைக்கு

K.K.S. வீதியிலிருந்து 100யார் தூரத்தில் யாழ்.இந்துக்கல்லூரிக் கருகில் (பிரப்பங்குளம் வீதியில்) 1 3/4 பரப்புக் காணி (*Municipal area*) விற்பனைக்கு உண்டு. மலசலகூடம், பங்குக் கிணறு, மின்சாரம், போக்குவரத்து வசதியும் உண்டு. விவரங்களுக்கு: கு.குருநாதன், பொற்பதிவீதிச் சந்தி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (5128)



'தூண்டி' வெளியீடாக
வதிரி இராஜேஸ்கண்ணனின்
'முதுசொமாக...'

காலம்:- 24.06.2002 திங்கள் காலை 9.00மணி.
இடம்:- யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.
தலைமை:- குப்பிளான் ஐ.சண்முகன்
வாழ்த்துரை:- கலாநிதி என்.சண்முகலிங்கன்
வெளியீட்டுரை:- தி.செல்வமனோகரன்
மதிப்புரை:- திரு.த.கலாமணி. திரு.செங்கையாழியான்
தொகுப்புரை:- திரு.தெணியான்
(5135)



தரமான.....
.....நவீன ரக ......
... மூக்குக் கண்ணாடிகள்!
உறுதியான ......
...... முக அமைப்புக்கேற்ப .......
....... கட்டுப் பற்கள்!





இத்துடன் மிதப்புப் பற்களுக்கு கிளிப்போட்டுக்கொள்ள,
உங்கள் சேவையில் என்றும் .....

## P.J.பர்ணாண்டோ

மூக்குக் கண்ணாடி அகமும் + பல்கட்டுமிடமும்

இல.: 542, ஆஸ்பத்திரி வீதி,
(ஆஸ்பத்திரி பிரதான வாயில்
முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை:
முதலாம் குறுக்கு,
(வண்ணமாடம் அருகில்)
பிரதான வீதி, நெல்லியடி.

யாழ்ப்பாணத்தில் எமக்கு வேறு கிளைகள் இல்லை.
உரிமையாளர்: லயன் A.ஜெயக்குமாரன்
(5138)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
04 - 10 - 1957



இறப்பு
10 - 05 - 2002

### திருமதி கந்தசாமி கனகமலர்

கண்ணிமைக்க மறந்தாலும் - உன்
கரமணைக்க மறவாத கதிரவனை
கண்கலங்க வைத்துவிட்டு
கண்மூடித் தூங்கிவிட்டாய்
கதிரவன் ஒளிதந்து காக்கும் வேளையம்மா!
காரிருள் நோக்கி நீயும் கலைந்ததும் ஏனம்மா?

எனது தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

நாகம்மாள் வீதி,
உடுவில்.

(5131)

பிரிவால் துயருறும்:
மகன்: கதிர்அனுசன்.


Nilkamal

எமது யாழ்ப்பாண வாடிக்கையாளர்களுக்கு

உங்கள் அபிமான
நில்கமால் வீட்டுத் தளபாட நிறுவனத்தினர்
யாழ்ப்பாணத்தில் தமது வாடிக்கையாளர்களின்
வசதி கருதி

## அம்பிகை களஞ்சியம்

நிறுவனத்தினரை ஏக விநியோகத்தர்களாக பெருமையுடன் நியமித்துள்ளார்கள் என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றார்கள்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

எஸ்.எம்.ஜி.மரியதாஸ்
**அம்பிகை களஞ்சியம்,**
*41, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.: 021-2511*

NILKAMAL ESWARAN PLASTICS (PVT) LTD.
328, Madapatha Road, Batakettara, Piliyandala.
Tel: (074) 215268 or (074) 212660 - 3 Fax (074) 215267
Customer Hotline: (074) 212664
E.mail: mktneppl@eureka.lk

(C/22662)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 - 09 - 1921



மறைவு
03 - 07 - 2001

அமரர்

### அருட்செல்வவிநாயகம் திலகவதி

*(முன்னாள் நிரந்தர தர்மகர்த்தா, துன்னாலை தெற்கு, வெல்லிக் கந்தோட்டப் பிள்ளையார் கோயில்)*

திதி: 23.06.2002(சதுர்த்தசி)

*எமது அன்புத் தெய்வமே! தாயே!!*
*ஓராண்டு கழிந்தால் என்ன ஒரு யுகம்தான் சென்றால் என்ன*
*நீங்கள் எமக்கு அணையாத தீபமன்றோ?*
*மீளாத்துயில் கொண்டு எமையெல்லாம்*
*ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற*
*எமது அன்புத் தெய்வமே!*
*நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள்!*
*அன்னையே உன் பிரிவின் போதுதான் அதனை உணர்கின்றோம்.*

உங்கள் அன்புச் செயல்களை நினைந்து தினம், தினம் துடித்துக கலங்குகின்றோம்.

- குடும்பத்தினர்.

பா.பாஞ்சலி
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(5077)

### இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும்

# கல்விப் பாரம்பரியத்தை கட்டிக்காப்பது யாழ்ப்பாணத்தின் கல்விச் சமூகம்தான்

## கல்வியியற் கல்லூரியில் கல்வி கலாசார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்23

இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் 'கல்விப் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்துவருவது யாழ்ப்பாணத்தின் கல்விச் சமூகம் தான் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்லூரிதின விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மனிதவள அபிவிருத்தி மற்றும் கல்வி கலாசார விவகார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணச் சமூகத்தின் பெரும் சொத்து கல்விதான். அந்தக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வளவு பிரச்சினைகள் மற்றும் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் எவருமே பினனிற்பதில்லை.

அரசியலில் பெரும் புகழ்பெற்ற சேர்.பொன்.இராமநாதன், சேர். பொன. அருணாசலம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்றவர்கள் யாழ்ப்பாணத்தின் பெரும் கல்விமான்களாக விளங்கினார்கள்.

இதுபோன்று சிங்கள அரசியல் தலைவர்களில் ஒருவரான மைத்திரிபால சேனநாயக்கவும் தனது கல்வியை யாழ்ப்பாணத்திலேயே கற்றார். அந்தக் காலத்தில் ஒரு பாரம்பரியம் இருந்தது. அதாவது கல்வியைக் கற்றால் யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் கண்டிப் பாடசாலைகளில் கற்கவேண்டும் என்பதுதான் அந்தப் பாரம்பரியம்.

அதே பாரம்பரியம் யாழ்ப்பாணத்தில் இன்றும் பேணப்பட்டு வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்குள்ள சில பாடசாலைகளுக்கு நான் விஜயம் செய்தபோது மாணவர்களின் வாண்மை விருத்தி பற்றிக் கண்டுகொண்டேன். இங்குள்ள மாணவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களைச் காட்டிலும் திறமை உள்ளவர்களாக இருப்பதையும் தெரிந்துகொண்டேன்.

யாழ்.கல்வியியற் கல்லூரியின் புதிய கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தியாக்கப்பட்டுக் கல்லூரி மேலும் தனது வளங்களைப் பெருக்கிக் கொள்ள என்னாலான உதவிகளைச் செய்வேன். ஜேர்மன் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிதியில் அதிக அளவான நிதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கே ஒதுக்கப்பட்டு வருகிறது - என்றார்.

கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி கலாசார விவகார அமைச்சின் செயலாளர் வி.கே.நாணயக்கார, மேலதிக செயலாளர்களான டி.பி.அமரசிங்க, எஸ். தில்லைநடராஜா, திட்டப் பணிப்பாளர்களான டி.பஷநாயக்க, எஸ.எம். ஹலகொட, யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா, டாக்டர் வை.தியாகராஜா மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ம-10-8-ரி)



நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் மற்றும் பிரமுகர்களை கல்வியியற் கல்லூரியில் தேசிய பான்ட் வாத்தியக் குழுவினர் மேளதாளத்துடன் அழைத்துவருவதையும் அமைச்சர் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

### சிலப்பதிகார ஆய்வரங்கின் 2ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்23

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'சிலப்பதிகாரத்தின் பண்பாட்டுக் கோலங்கள்' என்னும் தலைப் பிலான ஆய்வரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற உள்ளன.

இன்று 9.30மணிக்கு ஆரம்பமாகும் 'சிலப்பதிகாரத் தமிழகம்' என்ற தலைப்பிலான இரண்டாம் அமர்வு தமிழ்நாடு மதுரை காமராசர் பல்கலைக்கழக நுண்கலைத் தலைவர் பேராசிரியர் குருசாமி சேதுராமன் தலைமையில் இடம்பெறும்.

இந்த அமர்வில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசியுரை இடம் பெறும்.

பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ள 'சமய நெறிகளும், கோயில்களும்' எனும் தலைப்பிலான 3ஆம் அமர்வு பேராசிரியர் க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து இராமநாதன் நுணகலைககழக நடனத் துறையினரின் அம்மன் கலைக்கோலம்; குயிலுவக் கலைஞர்கள் நடன நிகழவுகளும், யாழ்.கல்வியற் கல்லூரியினர் அளிக்கும் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-13)

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்23

நல்லூர் பிரதேச சபை உப அலுவலக எல்லைக்குட்பட்ட கலாசாலை வீதி, இராச வீதி, பலாலி வீதிப் பகுதிகளில் எதிர்வரும் புதன்கிழமை கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகடு, பிரதேச சபை அலுவலகத்தில் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

### தொழில்சார் கருத்தரங்கு

ஐ.பி.எ.எஸ். நிறுவனம் தொழில்சார் கற்கை நெறிகளை அறிமுகப் படுத்தும் நோக்கிலான கருத்தரங்கு ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடத்துகிறது. ஆர்வமுள்ளோர் இதில் கலந்து பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-ரி)

## சப்பிரகமுவ பல்கலை மாணவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 16 பேர் கொண்ட மாணவர் குழு ஒன்று சமாதான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வந்துசேர்ந்தது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை இங்கு தங்கியிருக்கும் இக்குழுவினர், தீவுப்பகுதி உட்பட குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட உள்ளனர்.

இவர்களுக்கான தங்குமிடம் உட்பட அனைத்து வசதிகளையும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

இம் மாணவர் குழுவில் இருவர் மட்டுமே தமிழ் மாணவர்கள். ஏனையோர் சிங்கள மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பும் இவர்கள் செல்லும் வழியில் வன்னிக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளையும் பார்வையிட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)

## இந்திய றோலர்களின் வருகையால் மீனவர்களுக்கு பெரும் பாதிப்பு!

### அவர்களது ஜீவனோபாயம் கேள்விக்குறி

யாழ்ப்பாணம்,ஜூன்23

இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை அதிகரித்திருப்பதனால் மீனவர்களின் பெறுமதி வாய்ந்த வலைகள் அறுக்கப்படும் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த சில தினங்களாக நெடுந்தீவு, நயினாதீவு, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, தாளையடி, சுழிபுரம் போன்ற கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் றோலர்கள், வறிய தமிழ் மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்துச் சென்ற சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இதனால் அப்பகுதி மீனவர்கள் மிகுந்த நெருக்கடியான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட மீனவர்கள் தம்மை தொழில் செய்ய அனுமதிக்கக் கோரி மறியற்போராட்டம் நடத்தி தற்போதே ஓரளவு சுதந்திரமாக மீன்பிடிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்திய மீனவர்களின் வருகை, வலைகள் அறுக்கப்படல் போன்ற சம்பவங்கள் தமிழ் மீனவர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை இலங்கைக் கடற்படை நிறுத்தியுள்ளது. இதனால் இந்திய றோலாகள் இலங்கை கடற்பிரதேசத்துள் நுழைவது அதிகரித்துள்ளது.

இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதில் அரசு அதிக கவனம் செலுத்துவதால் இந்திய மீனவரைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் மெத்தனமாகச் செயற்படுவதாகச் செய்தியறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

### இடம்பெயர்ந்த நிலையில் அல்லலுறும்

## பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதி மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்

### பளைப் பிரதேச செயலரிடம் மகஜர் சமர்ப்பிப்பு

தென்மராட்சி,ஜூன்23

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் எனக் கோரி போர் அழிவால் மிகவும் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்கள் ஒன்றியம் பளைப் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த கிளாலி, முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டு இடங்கள் என்பனவற்றில் இராணுவத்தினர் தங்கியுள்ளனர்.

இதனால் மேற்குப் பகுதி மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடக் கூட படையினர் அனுமதிப்பதில்லை. இச் செயலானது அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முற்றிலும் முரணான செயலாகும்.

மேற்படி பகுதியிலுள்ள வீடுகளிலும் மற்றும் பொது இடங்களிலும் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேறி அப்பகுதி மக்கள் குடியேற அனுமதிப்பதோடு மக்கள் சுதந்திரமாக நடமாடவும், வழிபாடுகளில் ஈடுபடவும், பாடசாலையில் மாணவர் தமது கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

எனவே, கூடிய விரைவில் இது சம்பந்தமாக உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து நிறைவேற்றித் தரவேண்டும். இல்லையேல் இதற்காக வீதியில் இறங்கி எதிர்ப்புப் போராட்டம் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மகஜரின் பிரதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இந்தியா - இலங்கை இடையேயான கப்பல் சேவை ஓகஸ்டில் ஆரம்பம்

கொழும்பு,ஜூன்23

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் கப்பல் போக்குவரத்துச் சேவை ஒன்றை ஆரம்பிக்க இரு நாடுகளும் உடன்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வர்த்தகர்கள், உல்லாசப் பயணிகள் உட்பட இந்தியா செல்ல விரும்புவோருக்கு இந்தக் கப்பல் சேவை அதிக வசதியை அளிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானப் போக்குவரத்துக்குரிய செலவினைவிட இக்கப்பல் சேவைக்கு குறைவான கட்டணமே அறவிடப்பட உள்ளதால் இச்சேவையில் பலர் நன்மை பெறுவார்கள் என்றும் கூறப் படுகிறது.

ஆரம்பத்தில் கொழும்பிற்கும் தூத்துக்குடிக்குமிடையேயான கப்பல் சேவை இடம்பெறும் என்றும் -

தொடர்ந்து இக்கப்பல் சேவை இரு நாடுகளிலும் பிற இடங்களுக்கும் விரிவாக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சேவையில் தரமான கப்பல்கள் ஈடுபடுத்த் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஒ-12)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

60 நாள்களுக்கு மேற்பட்ட கறுப்பு வெள்ளை பொம்மனேரியன் நாய்க்குட்டிகளும் 14மாதம் நிரம்பிய அல்சேசன் ஆண்நாயும் விற்பனைக்கு உண்டு. செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (5061)

Diamond புறாக்கள், பூங்கன்றுகள், Concrete பூச்சாடிகள், மருந்து வகைகள், ஜமுனாபாரி ஆடுகள், குட்டிகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: Mr.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5069)

நல்லின Doberman, Pincher நாய்க்குட்டிகள், Dashund நாய்க் குட்டிகள், ஒரு Dashund சிவப்பு ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5068)

கொடிகாமம - பருத்தித்துறை வீதியில் 18 பரப்பு பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளும் கொண்ட கல்வீடும் காணியும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோயில வீதி, யாழ்ப்பாணம். (5065)

ஒரு புகைப்போட்ட திறம் வடமராட்சி புகையிலை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ.கதிர்காமலிங்கம் (குட்டி), தெணியம்பை, வல்வெட்டித்துறை. (5034)

மொசந்தாஸ், போகன்வில்லா (கடதாசிப் பூ), கொமுஞ்சி (தோடை), அம்பிறிலால் கன்று, பூங்கன்றுகள், சாடிகள் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் விற்பனை. தொடர்பு: பிரம்படிலேன், முதலாவது வீடு, கொக்குவில் கிழக்கு. (5042)

Town ACE வான் அனைத்து வளத்துடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பக்தகுணசீலன், இராமலிங்கம் வீதி, முடமாவடி, பூங்கனிச் சோலைக்கு அண்மையில். T.P.No.2976 (5040)

55நாள்கள் நிரம்பிய அல்சேசன் (செப்பேட்) பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- நடராஜா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (5117)

GOLD FISH மீன்கள் பெரியது. Red Cap, சுபாங்கி Blue, Red, ஏஞ்சல் மீன்கள். விற்பனைக்கு உண்டு. தொடர்பு- இல. 37/1, யாழ்இந்துக் கல்லூரி அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5093)

4அடி நீளம், 3அடி நீளம் உடைய லேத் மெசின் (கடைச்சல் இயந்திரம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.136, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (5090)

தூய இன பொமனேரியன் Brown (2மாதம்) ஆண் நாய்க் குட்டியும், Dashound Black & Tan பெண் நாயும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (5083)

புடைவைக் கடைக்கு பாவிக்கக் கூடிய அலுமாரிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தம்பிப்பிள்ளை அன் சன்ஸ், 343, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (5036)

கட்டில்கள், பெட்டகம், இறாக்கை (கடைப்பாவனைக்கு உகந்தது) Dre-ssing Table, Cupboard, Fedastal Fan, அலுவலக மேசை, Gas குக்கர், சிலிண்டர், Glassware, மின்சாரப் பொருள்கள் மற்றும் எவர்சில்வர் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஆ.க.கு.குகதாஸ், பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (5035)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4944)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, (வட்டக் குளம் முன்பாக) கட்டைப்பிராய். (5106)

## பெற்றுக்கொள்ளலாம்

பிறிமா இன பேட்டுக் குஞ்சுகளும் புறொயிலர் குஞ்சுகளும் 24.06.2002 இல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சுட்டி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. (5064)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 24.06.2002 மாலை பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யவும். எங்களிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்வோரிடம் மட்டும் திரும்ப இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்வோம். தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5066)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கடந்த 21.06.2002 வெள்ளிக் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் ஒரு மூக்குக்கண்ணாடி கண்டு எடுக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் கூறி பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: இறஞ்சித், குருநகர், யாழ்ப்பாணம். (5101)

## காணவில்லை

மாவெள்ளை நிறமுடைய கழுத்தில் பிறவுண் நிறமும் குத்துக் கொம்புடைய பெரிய ஏரி கொண்ட நாம்பன் மாட்டை 07.06.2002 தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் அறியத்தரவும். தொடர்பு S.பரணி, 319,ஓட்டுமடம் வீதி, அரசடி. சன்மானம் வழங்கப்படும். (5113)

## தேவை

காஸ்வெல்டிங் அனுபவமுடைய ரிங்கர் (Tinker) உடன் தேவை. நேரில் வரவும். தொடர்பு:- 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (5091)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 05.11.1970ஆம் ஆண்டு பிறந்த, உத்தராடம் முதலாம் பாதம, கிரகபாவம் கூடிய, தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட, A/L படித்த, கொம்பியூட்டரில் உயர் தேர்ச்சி பெற்று, விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு படித்த மணமகன் தேவை. விள.இல.1545, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5004)

## வாடகைக்கு வீடு தேவை

K.K.S. வீதியில் கொக்குவில் சந்திக்கும் தாவடிச் சந்திக்கும் இடையில் அல்லது ஆனைக்கோட்டை வீதியில் (கொக்குவில் மேற்கில்) வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: சஞ்சீவி சிகிச்சை நிலையம், ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு. (4895)

ஐந்துபேர் கொண்ட குடும்பத்திற்கு கிணறு, மலசலகூடம், மின்சாரத்துடன் கூடிய மூன்று அறைகளுக்குக் குறையாத வீடு யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு சுற்றாடலில் வாடகைக்குத் தேவை. விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 1547, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (5085)

## விற்பனையாகிறது

சந்திரா தனபாலசிங்கத்தின் 'சத்தியதரிசனம்' (சிறுவர் கதைத் தொகுதி) வெளிவந்துவிட்டது. அனைவரும் படித்துப் பயன்பெறும் அறிவியல், ஆன்மீகச் சிறுகதை, சித்திரங்கள் உள்ளடங்கிய இலக்கிய நூலாகும். புத்தகம் கிடைக்குமிடம் யாழ், சுனாகம் பிரபல புத்தகக் கடைகளில். (5116)

## வடமராட்சி கிழக்கில் கூரைத் தகடுகள் விநியோகம்

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வீடுகளை திருத்துவதற்காக கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளன.

வீட்டுக் கூரைகள் மட்டும் சேதமடைந்த குடியிருப்பாளருக்கே இக் கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டதையடுத்து 4 ஆயிரம் கூரைத்தகடு கிடைத்துள்ளன. அவை மக்களுக்கு விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன. (ம-182)

## சந்தை வாய்ப்பு

தென்னிலங்கை வியாபாரிகள் தற்போது மருதங்கேணிப் பிரதேசத்திற்கு வந்து கடல் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து செல்கிறார்கள்.

இதனால் கடல் உணவுப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதுடன், அப்பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. (ம-182)

## கிழக்குப் பல்கலையில் நூலகவாரம்

செங்கலடி,ஜூன்23

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த நூலக வாரம் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. இந்தியத் தூதரகத்தின் கல்விப் பிரிவு முதலாவது செயலாளர் எஸ்.ஜோஷி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

"வாசிப்புப் பழக்கம் ஒரு மனிதனை முழு மனிதனாக்கும். அப் பழக்கம் அறிவை விருத்தி செய்யும்" என்று அவர் தனது உரையில் குறிப பிட்டார்.

இரண்டாவது நாள் நிகழ்ச்சி நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. இதில் இலங்கை நூலகச் சங்கத்தினால் மட்டக்களப்பில் நடத்தப்படும் நூலக, தகவல் டிப்ளோமா பற்றி விளக்கப்பட்டது.

மூன்றாவது நாள் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

## பெற்றோலிய பொருள்களின் விலை உயர்வு

கொழும்பு,ஜூன்23

நேற்று நள்ளிரவு முதல் பெற்றோலியப் பொருள்களின் விலை 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

கடந்த வாரம் உலக சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து இந்த விலை உயர்வு இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வரும் காலங்களில் உலகச் சந்தைகளில் பெற்றோலியப் பொருள்களின் விலை வீழ்ச்சி அடையும் சாத்தியம் இருப்பதால் அவ்வப்போது விலைகள் குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுள்ளது. (ஒ-12)

## திறந்த வாகனங்களில் மா எடுத்து வருவது குறித்து விசனம்

அரியாலை,ஜூன்23

திருகோணமலையில் இருந்து தரைப்பாதையூடாக திறந்த வாகனங்களிலேயே கோதுமை மா யாழ்மாவட்டத்துக்கு எடுத்துவரப்படுவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு திறந்த வாகனங்களில் கோதுமை மாவு எடுத்துவரப்படும் போது மா மூடைகளில் தூசி படிந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் வாய்ப்புக்கள் காணப்படுவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தரைப்பாதையூடாக திறந்த வாகனங்களில் கோதுமை மா எடுத்துவருவது சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் செயல் என்பதால் சம்பந்தப் பட்ட சுகாதார அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொதுமக்கள் தரப்பில் கோரப்படுகிறது. (ஒ-17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி 2000/2001
## இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்குறிப்பிட்ட பரீட்சை எதிர்வரும் 2002-07-27, 2002-07-29, 2002-07-30 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் தொழிலாளர் கல்வி அலகில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து 2002-07-08 ஆம் திகதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50 வீதம் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ அல்லது நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*முக்கிய குறிப்பு:*

மாணவர்கள் தங்களுக்குரிய அனுமதி அட்டையை 2002-07-18 ஆம் திகதி தொழிலாளர் கல்வி அலகு, யாழ்.பல்கலைக் கழகத்தில் தமது யாழ்.பல்கலைக்கழக அடையாள அட்டையுடன் நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும்.

- பதிவாளர்.

(C/22651)




தொலைபேசித் தொடர்பு இருந்தும் IDDதொடர்பு இல்லாததால் வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுடன் தொடர்பு கொள்ளமுடியவில்லை என்ற கவலையா?

இதனை நிவர்த்தி செய்ய

V.J. Enterprises (Pvt) Ltd
ஸ்தாபனத்தார் தமது முகவர் ஊடாக
*V.J.GATEWAY*
என்ற முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.
*V.J.GATEWAY* ஒன்றின் பெறுமதி 1000/= மட்டுமே!
இதன்மூலம் நீங்கள் நம்பமுடியாத கட்டணத்தில் தொடர்பு கொள்ளமுடியும்.
இந்தமுறை மூலம் IDD அழைப்பின் பெறுமதியிலிருந்து 90% வரை விலக்களிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| CANADA | - 10/ - | 1 நிமிடம் |
| U.S.A. | - 10/ - | 1 நிமிடம் |
| U.K. | - 10/ - | 1 நிமிடம் |

ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 17/- 1நிமிடம்
வீடுகளில் தொலைபேசி வைத்திருப்பவர்களும் இம்முறை மூலம் பயன்பெறலாம.


உங்கள் தொடர்புகளுக்கு
முகவர் (Dealer)
V.J.Enterprises (Pvt) Ltd.
187, Adiapatham Rd,
Thirunelvely.
T.P.-021 - 2982

(5098) *(ஊனமுற்றோர் புனர்வாழ்வு,சங்க ஒழுங்கைக்கு முன்).*



HERO CYCLES





சர்வதேசரீதியில் ISO சான்றிதழ் பெற்றவும் இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் பைசிக்கிளுமாகும்

எட்டு வருட காலம் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள ஒரே பைசிக்கிளாகும்

ஸ்டான்ட், ஸ்போட்லைஸ் பைசிகிள்களுக்கு கரியர் லொக், பெல், ஸ்டான்ட் ஆகிய உதிரிபாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஹீரோ பைசிகிள் வாங்குபவர்களுக்கு இலவசமாக சிங்கப்பூர் போய் வரவும், இருபதாயிரத்திற்கும் அதிகமான பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது

யாழ்ப்பாணத்தில்

| | | | |
|---|---|---|---|
| E.S.பேரம்பலம் & கம்பனி 50,52, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | வீ.வேங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் 125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | ஈஸ்வரன் டிரேடர்ஸ் 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | பிள்ளையார் சைக்கிள் ஸ்ரோர்ஸ் சுன்னாகம் |

HERO CYCLES

Sole Agents
Faizal Hardware Stores
74, Dam Street, Colombo 12,
Phone : 433727,423273,384250-3

# தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்23

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு தென்மட்டுவில் தேனொளி கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது.

(ஓ-ரி)


## அவசர பொதுக்கூட்டம்

வடமராட்சியில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் நடத்துவோர் இக்கூட்டத்துக்குத் தவறாது சமுகம்தருமாறு வேண்டுகின்றோம்.

காலம் : 24.06.2002 திங்கட்கிழமை
காலை 10.00 மணி (ப.நேரம்)
இடம் : நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

(C/22661) - அரசியல்துறை, வடமராட்சி.

## 19ஆம் அணி மருத்துவ மாணவர்களுக்கான அறிவித்தல்

எதிர்வரும் திங்கட்கிழமை (24.06.2002) காலை 6.30 மணியளவில் Pathology விரிவுரை, போதனா வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

Batch Rep,
19ஆம் அணி.

(5145)

## குழுப் புகைப்படம் எடுத்தல்

இறுதி வருட கலைப்பீட மாணவர்களுக்கான குழுப் புகைப்படம் எடுத்தல்.

காலம் : 25.06.2002 (செவ்வாய்)
நேரம் : மாலை 4.00 மணி
இடம் : யாழ்.பல்கலைக்கழகம்

அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(5141) வருடப் பிரதிநிதி, யாழ்.பல்கலைக்கழகம்.


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி இ.தாரணி அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசரத்தினம் தங்கம்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதி வருட வணிகத்துறை மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(5144)

## 31ஆவது நாள் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பு



### திருமதி நடராசா பரமேஸ்வரி

பிறப்பு 20-04-1932 — இறப்பு 24-05-2002

இன்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமக்கு அனுதாபந் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றி.

*"கதிர்காமம்"*
*கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில்.*

- குடும்பத்தினர்.

(5142)

## சமய சந்நிதிகளில்

அரியாலை,ஜூன்23

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும்.

தினமும் மாலை 5 மணிக்கு விஷேட அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகித் திருவிழா நடைபெறும். தொடர்ந்து தெய்வீகப்பேருரைகள் இடம்பெறும்.

உற்சவ தொடக்க தினம் அன்று விகடகவி மு. திருநாவுக்கரசு " இந்து மதம் எங்கே செல்கின்றது?" என்ற தலைப்பிலும், மறுநாள் செவ்வாய்க் கிழமை சைவப்புலவர் கந்த சத்திய தாசன் 'இந்துமதத்தில் வைரவ வழிபாடு' என்ற தலைப்பிலும் தெய்வீகப் பேருரை ஆற்றுவார்கள்.

(ம-17)

★ ★ ★

இமையாணன் மேற்கு உடுப்பிட்டி விஸ்வகுல அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம் புனரமைக்கப்பட்டு எதிர்வரும் 27ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் அவர்கள் பிரதமகுருவாகக் கடமையாற்றும் இவ்வைபவத்தின் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறும்.

(13-ரி)

★ ★ ★

புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

[illegible] உற்சவ [illegible] தவிர்ந்த ஏனைய தினங்களில் [illegible] 8மணிக்கு சைவப்புலவர் சி.கமலநாதனின் சமய சொற்பொழிவு இடம்பெறும். (-13)

★ ★ ★

வண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறுகின்றது.

நாளை தீர்த்தத்திருவிழாவும் 25ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஒ-6)

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவை விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்த உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 11மணிக்கும் நடைபெறும். (ஒ-72)


## ENGLISH SPOKEN AND GRAMMAR

By: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்

இடம்: கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
காலம் : 26.06.2002 (புதன்)
நேரம் : 4.30 (ப.நே.)
வகுப்புகள்: செவ்வாய், வியாழன்.

(C/22665)


# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் விஜயதாசன் (SK)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விஜயதாசன் (SK) 20.06.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.06.2002 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வடக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.பாலகுமார் (மருமகன்)

*குளப்பிட்டி லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*

(5139)

## திருமதி நடராசா மகேஸ்வரிதேவி

(நாவற்குழி)

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா மகேஸ்வரிதேவி அவர்கள் 21.06.2002 வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் ஊரெழு செல்லப்பா நடராசாவின் (Former Asbestos E/Forman) அன்பு மனைவியும் ஜெயரஞ்சன் (Canada), ஜெயராஜ் (Erunway (Pvt.) Ltd.) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற குரும்பசிட்டி நாகலிங்கம் - தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஊரெழு செல்லப்பா - பூரணத்தின் மருமகளும் காலஞ்சென்ற சிவசோதி (அதிபர்), அருட்சோதி (அதிபர்), ஜெயசோதி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் சியாமளா, பிரந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆருஷனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிமுதல் பொரளை மனம்பெரி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.06.2002) திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.நடராசா (கணவர்).

*15, விகாரை லேன்,*
*வெள்ளவத்தை.*
*தொலைபேசி: 074-516478, 071-293405.*

(C/22664)

## திருமதி இராசரத்தினம் தங்கம்பிள்ளை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் தங்கம்பிள்ளை அவர்கள் நேற்று (22.06.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசரத்தினம் அவர்களின் அருமை மனைவியும் தாரணி (யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ - வணிகபீடம் இறுதி ஆண்டு), வாணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமேஸ்(லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் ராகவியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசரத்தினம் (கணவர்).

*உடுப்பிட்டி.*

(5136)

## செல்லையா பாக்கியராஜா (தங்கத்துரை)

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாக்கியராஜா அவர்கள் நேற்று (22.06.2002) சனிக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சிவகாமியின் அன்புக் கணவரும் பாசமலர் (ஆசிரியை, மட்டக்களப்பு), சதீஸ்குமார் (மூர்த்தி - கௌரி அழகுமாடம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சுரேஸ்குமார், ஜெகதீஸ்குமார் மற்றும் ஜெயராம்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமார் (மட்டு மாநகரசபை), அபராஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுசன், லிலக்சன், ஆதிதன் ஆகியோரின் பேரனும் தனலட்சுமி, வெற்றிவடிவேல், சரோஜினி, இராமேஸ்வரன் (உரிமையாளர், கௌரி அழகுமாடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.இராமேஸ்வரன் (சகோதரன்) (கௌரி அழகுமாடம்)

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(5143)


## KINGS ELECTRONICS

Intel Pentium - III 1133 MHz Computer

Intel Pentium - III 1133 MHz Processor with
256 KB Cache Memory :-
. MSI VIA Chipset Board
. 40 GB Hard Disk Drive
. 8 MB VGA Card
. 32 Bit Sound
. 128 SD Ram
. 15" Samsung Color Monitor
. 1.44 MB Floppy Disk Drive
. ATX Tower Case
. 108 Win 98 Keyboard
. Mouse & Pad
. 1200W Soundstar Speaker
. Acer 52X CD Drive
. Dust Cover

ஒரு வருட உத்தரவாதத்துடன்

57750/=

The above Configuration with
Pentium- III 733 Processor 55750/=
Intel Celeron 1000 Processor 52,750/=

*No 64, Stanley Road, Jaffna*

SOFTWARE CD 125/=

CD To CD Copy 100/=
Audio CD Selection (SONY CD) 250/=
MP3 Selection CD (SONY CD) 300/=

Sale

New Tamil Audio Songs Only 210/=
Other Audio CDS 100/=, 125/=, 150/=
HONDA EBK 600 Generator 44,000/=
இந்த விலைக்கழிவு கையிருப்பில் உள்ள CDக்கு மட்டுமே

T.V, VHSடெக், VCDடெக், MP3 டெக், Table Fan, மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களுக்கு நாடவேண்டிய

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
*இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.

## நாகம்ஸ் சுன்னாகம்

நவரச நாயகன் கார்த்திக் (இருவேடம்), ரோஜா, கௌசல்யா நடித்த
சந்தித்தவேளை
(றீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்)
(5086)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
ரோஜாக்கூட்டம்
(றீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)

## ராஜா யாழ்ப்பாணம்.

குணால், மோனல் மற்றும் பலர் நடித்த
பேசாத கண்ணும் பேசுமே...
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30
(C/22538)

## நீத் [illegible] ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிரம பின்னர் வேலணையில் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று அங்கும் விசாரணைகளை மேற்கொண டார். அவருடன் வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்பி. வீரசேகர, வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர்.

அதன் பின்னர் காரைநகர் கடற்படைத் தளத்துக்குச் சென்று விசாரணைகளை அவர் மேற்கொண்டார்.

வேலணையில் நடந்த தாக்குதல் சம்பவம் உடனடியாகவே பிரதமர் ரணிலின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக புனர்வாழ்வு அகதிகள், மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

பாரதூரமான விளைவுகள் ஏற்பட இடமளிக்கக்கூடாது என்பதில் பிரதமர் மிகுந்த அக்கறையுடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

பக்கசார்பற்ற விசாரணை நடத்தி சம்பவத்தின் உண்மை நிலையை அறிந்து தவறிழைத்தோர்மீது நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான சூழலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த காலங்களிலும் கடற்படையினரால்தான் சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டைகள், குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

87ஆம் ஆண்டிலும் குமரப்பா, புலேந்திரன் ஆகியோரைக் கைது செய்ததன் மூலம் கடற்படையே சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவித்தது. அப்படியான ஒரு போக்கையே கடற்படை இப்போதும் கடைப்பிடிக்கின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பாக அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இறுக்கமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இச்சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ள விசேட ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன்ட் புருகோவிட் சிபூர்சு செய்துள்ளார். இதன்படி விசேட ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக இனங்காண வேண்டும்.

எமது உறுப்பினர்கள் தீவகத்தில் தொலைத்தொடர்புக் கருவிகள் உபயோகிப்பது பற்றியும் நாம் இந்த மாநாட்டில் வலியுறுத்தினோம். விரைவில் எமது உறுப்பினர்கள் தீவகத்திற்கு தொலைத்தொடர்புக் கருவிகள் எடுத்துச்செல்வதற்கான அனுமதி கிடைத்துவிடும்

- என்றார் புலித்தேவன். (ஐ-8)


MOBILE NET
MCS
COMPUTER SERVICES

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். BIT

BIT தெரிவுப் பரீட்சைக்கான
முன்மாதிரிப் பரீட்சையும் வழிகாட்டல் கருத்தரங்கும்
(C/22667) இன்று 23-06-2002 மாலை 2.00 மணி



ROTARACT CLUB

இலங்கை றோட்டறக்ட் கழகங்கள்
ஒன்றிணைந்து நடத்தும்

மாபெரும் இலவச மருத்துவ முகாம்

இடம் : மானிப்பாய் இந்துக் கல்லூரி
நாள் : இன்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 3.30 மணிவரை

கொழும்பு மாநகரிலிருந்து இதற்கென விசேடமாக வருகைதந்துள்ள மருத்துவ நிபுணர்கள் சிகிச்சை வழங்குகின்றனர்.

அத்துடன்,
* உங்களுக்கான மருந்துகள் முற்றிலும் இலவச விநியோகம்
* கல்வி உபகரணங்கள் * மூக்குக் கண்ணாடிகள்
* அத்தியாவசியப் பொருள்கள் என்பனவும் வழங்கப்படும்.

அனைவரையும் வந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-22668) - இலங்கை றோட்டறக்ட் கழகங்கள்.



இளமை மற்றும் அழகின்
ரகசியம்




தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

பயோட்டின் - H250

உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...

மேலும்
1. தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக்கூடிய முடி
2. சரும நோய், தோல் சுருங்கி வயதான தோற்றம், காய்ந்த சருமம்
3. சீரற்ற உடையக்கூடிய நகம்

போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற BIOTIN H உதவுவதாக விஞ்ஞானரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.

எமது அபிமான வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!
அனேகமானோரின் வேண்டுகோளுக்கிணங்க தற்பொழுது யாழ்நகரின் எல்லா முன்னணி பார்மஷிகளிலும்
BIOTIN H250 கிடைக்கப்பெறும்.
ஆர்கெம் - கொழும்பு.
தொ.இ. 01-470290, 077-805738.
E-mail: arkem@sltnet.lk



இலங்கையின் அனைத்து றோட்டரக்ட் கழகங்களும்
இணைந்து நடத்தும்

Time for
Hands together

சமாதானத்தை மையப்பொருளாகக் கொண்ட
கலை நிகழ்ச்சி

இடம் : லொயலாஸ் கல்யாண மண்டபம்
காலம் : 23.06.2002 பி.ப. 4.00 மணி (பு.நேரம்)

இதுவரை
யாழ்நகரில் இடம்பெறாத
புதிய கலையம்சத்தை உள்ளடக்கிய நிகழ்ச்சி
காணத்தவறாதீர்கள்!

(C/22670)



எக்ஸ்போ விமான சேவை
முக்கிய அறிவித்தல்

நாளை திங்கட்கிழமை இடம்பெறும் சேவையில் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கீழ்க்காணும் இலக்கங்கள் கொண்ட பயணச்சீட்டுகளைப் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை பயண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அன்று முற்பகல் 11.30மணிக்கு சிங்கள மகா வித்தியாலயத்துக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

எக்ஸ்போ விமான சேவை முகவர்.

இலக்கங்களின் விவரம் வருமாறு:

| N.I.C.NO. | T.NO. | N.I.C.NO. | T.NO. |
|---|---|---|---|
| 4235221 | 0256 | D8077980 | 0674 |
| 0902044401V | 0258 | VF558123 | 0777 |
| | 0255 | 037181136 | 0778 |
| | 0253 | 566311372V | 0803 |
| 686670872 | 0254 | 553200909V | 0825 |
| M159285 | 0205 | 226925570V | 0899 |
| 465852887V | 0257 | 547441532V | 0898 |
| 567893006V | 0953 | 326782157 | 0900 |
| 610014798V | 0954 | 726442207V | 0897 |
| I com 041516 | 0491 | 766941826V | 0906 |
| I com 041520 | 0492 | 835350455V | 0932 |
| 631590861V | 0493 | 537180359V | 0933 |
| 595692890V | 0500 | 522882828V | 0934 |
| I com 041520 | 0494 | 10-3-1995 | 0918 |
| I com 041520 | 0499 | 13-7-1999 | 0915 |
| 5605746120D | 0669 | 316650961X | 0907 |
| M0353086 | 0668 | 590670383V | 0971 |
| D5370869 | 0673 | 442311811V | 2751 |

(C/22669)


## மத்தியஸ்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விரைவாக்ப் பேச்சை ஆரம்பிக்க வசதியாக இருதரப்புகளுக்கும் இடையில் மத்தியஸ்தராகப் பணியாற்ற நோர்வே முடிவு செய்துள்ளது என்றும் - இது தொடர்பாக இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடவிருப்பதாகவும் - தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறிகாட்டுவான் மற்றும் கரம்பன் கண்ணகை அம்மன் ஆகிய இறங்குதுறைகளில் இருந்து விசேட படகுச் சேவைகளும் யாழ்.பஸ் நிலையத்திலிருந்தும் விசேட பஸ் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(ஐ-9-10)

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்கின்றனர். இது தொடர்பாக விசாரணைகள் நடக்கின்றன.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார் என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. விசாரணைகளின் மூலமே அது தெரியவரும். அதற்கு முன் எந்த முடிவையும் எடுக்கமுடியாது - என்றார் அவர்.

வேலணைச் சம்பவம் தொடர்பாக இராணுவம், புலிகள், கடற்படை, பொலீஸ் ஆகியன தனித்தனியாக விசாரணை நடத்தி உண்மையைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று நேற்றைய மாநாட்டில் இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தீவுப்பகுதி நிலைமை தொடர்பாக ஆராய பக்க சார்பற்ற விசேட ஆணைக்குழு ஒன்றை நிறுவி, விசாரணை நடத்தவேண்டும் என்று கண்காணிப்புக் குழுவின் தலைவர் கொழும்பு சென்று அரசுத் தரப்பிடம் கோருவார் என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படையின் பிரதம அதிகாரி றியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம, கேணல் டி.சி.பி.ராஜசிங்க, றியர் அட்மிரல் சரத் வீரசேகர, யாழ்.மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க, கொமாண்டர் பி.எம்.விக்கிரமசிங்க ஆகியோரும் புலிகள் தரப்பில் அரசியல் துறையைச் சேர்ந்த புலித்தேவன், பாப்பா, தீவகப் பொறுப்பாளர் செம்மணன், அருணன் (ஐயா) ஆகியோரும் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொன்ட் புருகோவிட், ஜோர்ஜன் பக்லண்ட், பெக்கா ஆகியோரும் புலிகள் தரப்புக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி அருட்திரு.ஞானரட்ணம் அடிகளும் கலந்துகொண்டனர்.

அரசியல்துறையைச் சேர்ந்த புலித்தேவன் விசேட அழைப்பின் பேரில் கண்காணிப்புக்குழு வாகனத்தில் யாழ்.வந்திருந்தார். (ஐ-3-8-6)

## மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேலணையில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு மீன்பிடிக்கு வரி அறவிடுவது தொடர்பாக பொதுமக்களுடன் ஏற்பட்ட முரண்பாடே காரணம் என்று தமிழோசைக்கு அளித்த பேட்டியில் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்திருந்தார்.

அவரது அந்தக் கூற்றுக்கு தீவக மீனவர்கள் தமது கண்டனத்தை தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி. உறுப்பினர்களே தொலைசெய்வதற்கு முயன்றார்கள் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

இந்தக் கொலைமுயற்சி தொடர்பாக டக்ளஸ் செவ்வியளித்தபோது இதற்கும் தமக்கும் பொறுப்பல்ல என்று கூறி அப்பாவி மீனவர்களாகிய எம்மீது பழியைச் சுமத்தியுள்ளார்.

இத்தகைய பழிகளை எம்மீது சுமத்துவதில் அவர் வாய் வல்லமை உள்ளவர் என்பது யாவரும் அறிந்ததே

இவ்வாறே தமிழ்க்கூட்டமைப்பினர் மீது நாரந்தனையில் தாக்குதல் நடத்திவிட்டு கொலையும் செய்துவிட்டு அதில் இருந்து தப்ப எம்மீது பழிசுமத்தினார். அப்படி இருந்தும் நாம் எதுவும் செய்யமுடியாது வாய் பூட்டப்பட்டு இருந்தோம்.

தற்போது அவருக்கு எமது உள்ளக்குமுறலை வெளிப்படுத்துவதுடன் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதையும் கூறிவைக்க விரும்புகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.